305

பிஸ்மில்லாஹி.

இஃது
வேஷ மஷாயிகுகளான அஞ்ஞானப் போலிகளின்
உபதேசக் கூற்றுகளும், அவர்களுக்கு மவர்கள்
வலையிற்பட்ட முஸ்லி மாண்பெண்களுக்கும்
நல்மாராயங்களைக் கூறும்

இஸ்லாஹுல் முல்ஹிதீன்

(ம அ)

ஹிபாஜத்துல் முஸ்லிமீன்.

இதனை
வாலாஜா தாலூக்கா, மேல்விஷாரம்
க. முஹம்மது இப்றாஹீம் சாகிபு
(அஹ்ஸன்) என்பவரால் கோர்வைசெய்து

சென்னை, கேசரி அச்சு யந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரத்து 1355-ம் ஆண்டு, ஜமாதியுலவ்வல்மீ
1936
[காபிரைட்

Q7:417
N36.
171727.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

போலி மஷாயிகுகளான அஞ்ஞானிகளை சீர்திருத்தவும், அவர்களின் வலையிற்பட்ட முஸ்லிம் பிறவிகள் தம்மை பேணிகாக்கவும், பேசியுள்ள நல்மாருயங்களை இப்பிற்காலத்தில், நமது ரங்கையாகியதீனுடைய காரியங்களில் சோம்பலாயுள்ளவர்கள், அல்லா(ஹ்) றசூலுடைய ஏவலும் ஷரஉடைய மகிமையும் அறிந்து நல் அமல்களை செய்யவும், ஹக் தஆலாவினிடம் ஆதரவு வைத்துக் கோர்வைச் செய்த

இஸ்லாஹுல் முல்ஹிதீன்

(ம அ)

ஹிபாஜத்துல் முஸ்லிமீன்.

இதனை

வாலாஜா தாலூக்கா, மேல்விஷாரம்

கடைக்கார அப்துல் கனீ சாகிபு அவர்கள் குமாரர்

க. முஹம்மது இப்ருஹீம் சாகிபு

(அஹ்ஸன்) அவர்களால் இயற்றப்பட்டு

மதிப்புரையிற்கண்ட கல்விக் கடல்களாகிய அனந்தம்

உலமாக்களால் பரிசோதித்து

மதரூஸ் இலாகா, ஆம்பூர் ஆலீஜனுப்,

சிப்பா. அஹ்மது சாகிபு

அவர்கள் தமது பொருளுதவியின் முயற்சியால்

சென்னை கேசரி அச்சு யந்திரசாலையில்

பதிப்பிக்கப் பட்டது.

ஹிஜுரத்து. 1355-ம் ஆண்டு

முதற் பதிப்பு.

ரிஜிஸ்டட்டர். காப்பிரைட்.

புத்தகம் 1-க்கு அ. 4. வி. பி. யில் அ 9

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இந்த இஸ்லாஹுல்முல்ஹிதீன் (மஅ)ஹிபாஜத்துல் முஸ்லிமீன் என்னும் புத்தகத்தைக் கோர்வைச் செய்தச்சிட்ட மேல்விஷாரம் கடைக்கார அப்துல்கனீசாகிபவர்கள்குமாரர் (அஹ்ஸன்) க. முஹம்மது இப்ருஹீம் சாகிபவர்கள் பெயரால் கனம்பொருந்திய கவர்ன்மேண்டு புக்ரிஜிஸ்தரார் சட்டப்படிக்கு ரிஜிஸ்தர்செய்திருப்பதால் மேற்படியார் உத்தரவன்றி அச்சிடப்பட்டவர்களும், அதை பதிப்பித்து கொடுக்கும் அச்சுக்கூடத் தலைவர்களும், ஷியார் கோரும் நஷ்டத்துக்கு உள்ளாவார்களென்பதை அறிவார்களாக.

இப்படிக்கு,

க. முஹம்மது இப்ருஹீம்,

மேல்விஷாரம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

முகவுரை.

ஹம்துசலவாத்துக்கு பின்னர், நன்றுகளைவவி கெடும்புகளையகற்றி
நமதுசங்கையாகிய தீனைவிர்த்தி செய்யநாடும் முஸ்லிம் சோதரீர்.

இறைவன் இன்னுமிறைவனின் தூதராகிய நபிகள்நாதர் (ஸல்.)
அவர்களின் ஏவல்கள்மீது அன்பில்லாத சோம்பேரிகள்மிகுத்த
இப்பிற்காலத்தில் முல்ஹிதஞ் ஞானிகள், முஸ்லிமக்கள் வாசஞ்செய்யு
மனந்த மூர்களிற் புகுந்து தீனைவீணாக்கி, வீணைதீனாக்கி, மனம்போன
போக்கில் உபதேசங்கள் செய்வதில் அநேகரால் கடித மூலமாயும்,
நேரிலும், குறைகூறியதிற் சிலதை இதனடியிற் சுட்டிக் காட்டப்
படுகிறது யாதெனில்,

அல்லா(ஹ்)வையும் ஆகிரத்தையும் மஹாஉக்ர ஹம்வாய்ந்த நரக
மும், கபுர், ஹஷ்ர், மீஸான், புல்ஸிறாத், சொர்க்க மிவைகளைக் கண்ட
தெவர். தொழுகை, நோன்பு, ஸக்காத்து, சதகா முதலியபுண்யங்களைப்
பார்த்ததெவர். சலவாத், சலாமின் பலனறிந்து பயனடைந்தவர்கள்
யார். இவைகளெல்லாங் கட்டுக்கதைகளென்றும், மீசையைவெட்டாமல்
தாடியைசிரைப்பது மேன்மக்களுடைய முகலக்ஷணமென்றும்,
ஆட்டம் பாட்டங்கள் பார்ப்பதும், வட்டிவாங்கலும், ஆகுமென்றும்
வலிமார்கள், கபரிடம்வணக்கம்புரிந்து தேழ்வையானதைக் கேட்கலா
மென்றும், எங்கள் முரீதை கைப்பற்றுவர்கட்கு ஹலால் ஹறாமிரண்டு
மில்லை என்றும், இன்னுமநேக கெடும்புகளைபிதற்றி அநேக லக்ஷக்
கணக்கான முஸ்லிம் ஆண் பெண்களை வழிகெடுத்து தீங்குகளை
தொடுத்து, ஷரஐ தட்டி, முரீதையொட்டி, அல்லா(ஹ்) றசூலுடைய
ஏவல்களை அசட்டையாக விட்டிருப்பவர்களைப் பலநாடுகள் சென்று
அஹ்ஸனுங் கண்டுங்கேட்டு மாயாசமுற்று குறுஆன், ஹதீதுகளையும்,
ஷரீஅத்தையும் சன்மார்க்கத்தையும் நபிமார்களின் வார்சுகளான உல
மாக்களையும் தூஷிக்கும் அஞ்ஞானமூதேவிகளும், அவர்களின்வலையிற்
சிக்குண்ட முஸ்லிம்பிறவிகளும், ஷரஉடைய சட்டங்களின்மகிமைகளை
சுருக்கமாய்தெரிந்து நல்ஹிதாயத்துபெறும் உபதேசங்களைக்கூற றஹ்
மானின் கிருபையால் இச்சிறுநூலினைக் கோர்வைச்செய்து, இல்மின்
களஞ்சியமும், ஈடேற்றத்தின் வழிகளைக் காட்டும் பொக்கிஷங்களாகிய,
கல்விக்கடல்களாகிய அனந்தம் உலமாக்களால் பரிசோதித்து அவர்க
ளால் மதிப்புரைகள் பெற்று மிதற்குபெயர் இஸ்லாஹுல் முல்ஹி
தீன் (மஅ) ஹிபாஜத்துல் முஸ்லிமீன் என்று வைக்கப்பட்டது.

இதனை மதருஸ், இலாகா ஆம்பூர் ஆலீஜனுப், சிய்யா, அஹ்மது சாஹிபு அவர்களும், அவர்கள் தமது அருமைப்புதல்வர், ஆலீஜனுப், சிய்யா, அ. அஹ்மதலீசாஹிபும், ஆகிய இவ்விரு ஸகீயாளர்கள் தங்கள் நன்கொடை முயற்சையினால் சுத்த தமிழில் அச்சிட்டு இதனை வலியவர் எளியவர் எவரும் எளிதில் கைப்பற்றி நன்றமல்கள் செய்து, நஜாஅத்துப் பெற நல்நிய்யத்துடன், குறைந்த 'ஹதியா வாகவைத்து வெளிபடுத்தி இருப்பதால், இதனைகைப்பற்றும் சகோதரர்கள் முற்றும் படித்துணர்ந்து அவ்வறிவிலிகளாகிய, அஞ்ஞான முல்ஹிதுகளையும், அவர்கள்வலையிற் பட்டுழலும் முரீதீன்களையும், நமதுசங்கை ஷரஜபற்றி ஹக்கானமார்க்கத்துக் கிடர்ப்பரவ விடாமல் தீனுக்குதவி செய்வீர்களாக. அப்படி செய்பவர்களுக்கும் இன்னுமிந்த ரிஸாலாவைப் பரிசோதித்த மார்க்க மேதாவிகளுக்கும் அச்சிட்டு வெளியிட பொருளுதவிச் செய்த நன்கோடையாளர்களுக்கும், அவர்கள் தமது அஹ்லுகளுக்கும், இதனைக் கோர்வைச்செய்த சிற்றடிமையான க. முஹம்மது இப்ருஹீம் அஹ்ஸன் என்னும் ஆஸிக்கும், இன்னும்எல்லா முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கும், இகபர பிருலோகத்திலும், நற்பயனைப்பெற இறைவன் இன்னருள் புரிய துஆ செய்வீர்களாக:—

ஆமீன் பி-பதலி-தா-ஹா-வ-யாஸீன்.

இங்ஙனம்

க. முஹம்மது இப்ருஹிம். (அஹ்ஸன்)

மேல்விஷாரம்.

வேண்டுகோள்.

இந்நூல் கைப்பற்றும் இகுவான்கள் பிழைத்திருத் தத்திற்கண்ட தவருதல் 5-ம் முன்னதாகத் திருத்திக்கொண்டு பின்பு படிக்க விரும்புகின்றனம்.

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.	பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.
10	28	உரவுக்கு	ஷரவுக்கு	20	23	கபுருகனை	கபுருகளை
14	26	எவராய்து	எவராய்ந்து	24	5	ஷரும் என்று	ஹரும் என்று
16	6	கெடுப்பரை	கெடுப்பவரை	...	...	... ...	... ...

இந்த இஸ்லாஹுல் முஸ்லிமீன் (மஅ)ஹிபாஜத்துல் முஸ்லிமீன் என்னும் ரிஸாலாவை நோட்டமிட்ட மார்க்க மேதாவிகளான சங்கை பொருந்திய உலமாக்களால் வரையப்பெற்ற

மதிப்புரைகள்.

1-வது ஸ்ரீயவேலூர் மத்ரஸே பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தின் முதர்ரிஸ், நாயபே நாஜிர், ஆலீஜனுப், மவுலானு மவுலவீ அப்துல் றஹீம் சாஹிபு, 1. ஷை முதர்ரிஸ் ஆலீஜனுப், முப்தீ, மவுலானு மவுலவீ ஷேக் ஆதம் சாஹிபு, 2. ஷைமுதர்ரிஸ் ஆலீஜனுப், மவுலானு மவுலவீ ஸியாவுத்தீன் அஹ்மத்அமானி சாஹிபு, 3. ஷை முதர்ரிஸ்ஆலீஜனுப், மவுலானு மவுலவீ ஹக்கீம் அப்துஸ்ஸமத் சாஹிபு, 4. வேலூர் சுல்தானுல் வாஇஜ், ஆலீஜனுப், மவுலானு மவுலவீ முஹம்மது கமாலுத்தீன் சாஹிபு, 5. வேலூர் முபல்லிக் இஸ்லாம் செக்ரிடரி, ஆலீஜனுப், மவுலானு மவுலவீ முஹம்மது ஷர்புத்தீன் சாஹிபு, 6. ஆத்தூர் ஆலீஜனுப், மவுலானு மவுலவீ முஹம்மது இப்ருஹீம் பாஸில் தேவு பந்த், 7. வளத்தூர் யூனனி மெடிகல் ஹாலின் தலைவராகிய ஆலீஜனுப், மவுலானு மவுலவீ ஹக்கீம் முஹம்மது மூசா சாஹிபு, 8. ஆக இந்த எட்டு உலமாக்களின் அபிப்பிராயமும், அவர்களின் கையொப்பமும் பின்வருமாறு காண்பீர்களாக.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்.

சர்வலோக சாக்ஷாத் ஸுப்ஹானஹு வதஆலாவுக்கே ஸர்வஸ்தோத்திரமும் உரியது. ஸலாத்தென்னும் கருணையும், ஸலாமென்னும் ஈடேற்றமும், ஸகலருக்கும் ஸதாகுருவாகிய ஸன்மார்க்கபோதகர் (ஸல்)அவர்களின் மீதும் உண்டாவதாக. பிறகு,

மேல்விஷாரம் நமதுநண்பராகிய பொதுநலப்பிரியரும் உன்னத உயர்குணம்படைத்த உத்தமரும் ஸன்மார்க்கஸீலரும் நன்னடக்கை வாய்ந்த மூதறிஞருமாகிய ஆலீ ஜனுப், பாவலர் க. முஹம்மது இப்ருஹீம் ஸாஹிப் (அஹ்ஸன்) அவர்கள் கல்விஞானத்திற் சிறந்தோங்கி விளங்கும் இப்பூமண்டலத்தின்கண் சிலபோலிகளாகிய வேஷமஷாயிகுகள் கிளம்பி மார்க்கமென்பது அன்று,தொழுகையுமன்று,நோன்புமன்று, ஸக்காத்துமன்று, சதக்காவுமன்று, இன்னும்மார்க்கவிதியான பல அனுஷ்டானங்களுமன்று, ஆனல் யெங்கள்முரீதை யெவர்கள்

பெற்றுக் கொண்டார்களோ, அவர்கள்தான் மோக்ஷ மடைவார்களென்று பிதற்றி, தங்களின் வயிற்றுபிழைப்பின்நிமித்தம் உழன்று திரிந்துவரும், இக்குண்டர்களின்வண்டவாளங்களை உலமக்களின்பால் எடுத்துக் காண்பிப்பான்வேண்டி (இஸ்லாஹுல் முல்ஹிதீன் (மஅ) ஹிபாஜத்துல் முஸ்லிமீன்) என்ற இவ்வரிய நூலை இவ்வறிவிலிகளின் கூற்றுகளுக்கு மருப்பாகவும், உலகஜனங்களின் அறியாமையென்னும் அஞ்ஞானத்தை விட்டும் தட்டிஎழுப்புவான்வேண்டியும், எழுதியுள்ள இப்புத்தகத்தை நோட்டமிட்ட யாம் மிகவும்ஸந்தோஷமடைந்தோம். ஏனெனில், இப்புத்தகத்திலுள்ள விஷயங்களனைத்தும் மிக முக்கியமானதும், மார்க்க பக்தியை வளர்ந்தோங்கச் செய்யக்கூடியதாகவும் இவ்வறிவிலிகளாகிய போலிமஷாயிகுகளின் விஷமத்தனமானகூற்றுகளின் மறுப்பாகவும், உலக ஜனங்களுக்கு புற்றுணர்ச்சியை யளிக்கக் கூடியதாயும் இருக்கிறது.

எனினும், இப்புத்தகத்தை அரபுத்தமிழிலும், வரைந்திருப்பாரேயானால், மாதர்கட்கும் மகாப்பயனை யளிக்கக்கூடியதாயும் நலமாகவுமிருக்கும். எனவே இவர் இன்னும் இதுபோன்றபலஅரியபுத்தகங்களையும், மார்க்கசம்பந்தமான பலநூல்களையும், இன்னும் பல உரிய ரிஸாலாக்களையும், எழுதவும், கோர்வைசெய்யவும், கவிகளினற்பாடவும் இறைவன் இன்னவர்கட்கு இன்னருள்புரிவானாக.

(فاضل دیوبند)

ضیاء الدین احمد امانی
مدرس مدرسہ باقیات صالحات ویلور

محمد عبد الصمد
مدرس مدرسہ باقیات صالحات ویلور

2-வது உமர்ஆபாத் (ஜாமிஅ அரபியா,) தாருஸ்ஸலாம். மத்ரஸாவின், நாஜிம் ஆலிம் ஜனாப், மவுலானா மவுலவி பஜலுல்லா சாஹிபு, 1. ஷை மத்ரஸாவின் உஸ்தாத் ஆலிம்ஜனாப், மவுலானா மவுலவி முஹம்மது இஸ்மாயீல் சாஹிபு, 2. ஷை மத்ரஸாவின் உஸ்தாத் ஹாபிஜ், ஆலிம் ஜனாப், மவுலானா மவுலவி ஹாபிஜ், அப்துல் வாஜித் சாஹிபு 3. ஆக இந்த மூன்று உலமாக்களுடைய அபிப்பிராயம் உருது பாஷையில் வரைந்து கையொப்பமிட்டுள்ளதை பக்கத்து. செயிட்டில் காண்பீர்களாக.

JAMIA-E-DARUSSALAM.
ARABIC COLLEGE.
P. O. OOMERABAD.
Via, Ambur, N.A.DT.
(MADRAS).

جامعہ عربیہ دارالسلام عمرآباد
متصل آمبور ضلع شمالی آرکاٹ
صوبہ مدراس

Dated ۱۹۳۶ ... ۱۸ ... 1936

بسم اللہ الرحمن الرحیم   الحمد للہ وسلام علی عبادہ الذین اصطفیٰ

اما بعد جناب واعظ الحاج محمد ابراہیم صاحب رحسن سالم وشارحی نے غیرت اسلامی ودینی کے باعث اپنے دنیاوی کاروبار کو
عرصہ دراز سے خیرباد کہکر گمراہوں مشرکوں بدعتیوں اور ملحدوں کی ہدایت کو اپنی زندگی کا مقصد قرار دیکر
جو تبلیغی منظوم متعدد تصانیف اردو زبان میں فرمایا اور بھٹکوں کو راہ پر لایا جن تصانیف مفیدہ میں سے
ایک تصنیف آپکی "اصلاح الملحدین (نام) حفاظۃ المسلمین" ہے اس کے متعدد مقامات ہم نے پڑھکر سنے
اسلئے ہم تصدیق کرتے ہیں
چونکہ ہم ٹامل زبان سمجھ سکتے ہیں کہ آپنے اس رسالہ اور اس کے قبل دوسرے رسائل بڑی دینی غیرت وایمانی حمیت سے
کام میں لاکر ملحدوں بدعتیوں اور مشرکوں کا احسن طریق پر رد فرمایا ہے خداوند پاک انکو جزائے خیر بخشے آمین اور
ہم طریق سے امید ہے کہ خود بھی ان کی تصانیف سے فائدہ اٹھائیں اور جنوبی اضلاع وغیرہ کے باشندوں تک
ان کی تصانیف کو پہنچنے میں حتی الامکان کوشش کرتے رہیں۔ والسلام

خاکسار محمد فضل اللہ عفی عنہ ناظم جامعہ عربیہ دارالسلام عمرآباد
عبدہ محمد ... استاذ جامعہ دارالسلام
العبد ... استاذ جامعہ

பேரம்பூர் ஜமாலியா மதரசாவின் உஸ்தாத்மார்களாகிய, சங்கை பொருந்திய உலமாக்களின் அபிப்பிராயங்களையும், கையொப்பமும் பின்வருமாறு காண்பீர்களாக :—

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹுக்கே அளவற்ற புகழ். அவனின் உண்மைத் தூதரும் உலக ரக்ஷகருமாகிய நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்மீதும், அவர்களது தோழர்கள் பின் தொடர்ந்தவர்கள்மீதும், அவனது கிருபாகடாக்ஷம் உண்டாவதாக! பிறகு

ஞானச் சுடரும் அறிவின் விசாலமும் வளர்ந்தோங்கி வரும் இந்நாட்களிலுங்கூட தங்கள் வயிற்றுப் பிழைப்பைச் சிரமேற்கொண்டு

ஞானிகளென வெளிக்காட்டி அஞ்ஞான இருளில் பல மக்களை பதிய வைத்துக்கொண்டு "மஃரிபா" வெனும் வாய்மொழிகளால் ஏமாற்றித் திரியும் சில போலி மஷாயிகீன்களுக்கும், அவர்களின் வலையிற் சிக்கியவர்களுக்கும், நல்லறிவு புகட்டுவதற்காகவும், சன்மார்க்க நெறியை விளக்கிக்காட்டி சீரான வழியில் நடத்தி வைப்பதற்காகவும் முயற்சியோடும் நல்லெண்ணத்தோடும், மேல்விசாரம் ஆலீ ஜனாப் K. முகம்மது இபுறுஹீம் சாஹிப் அஹஸன் அவர்கள் இயற்றிய "இஸ்லாஹுல் முல்ஹிதீன்" (ம-அ) "ஹிபாஜத்துல் முஸ்லிமீன்" என்று நாமஞ் சூட்டப்பெற்ற நூலின் கையெழுத்துப் பிரதியை நாங்கள் கண்ணுற்றோம். உண்மையாக அந்நூலானது, மேல் கூறப்பட்ட போலி மஷாயிகீன்களுக்கும், அவர்களின் வலையிற் சிக்குண்டவர்களுக்கும், மெய்யான அறிவையும், சன்மார்க்க விளக்கத்தையும், அளிக்குமென்பதில் ஐயமில்லை. ஆனால் சிற்சில விடங்களில் நூலாசிரியர் நன்னெறி புகட்டும் அதிக ஆவலால் ஏதோ இரண்டொரு விடங்களில் மிகப்படையான வார்த்தைகளை உபயோகப்படுத்தி யிருக்கிறார்கள். அது நம் (முஸ்லிம்கள்) மீதுள்ள அபிலாசையைத் தவிர வேறில்லை. இப்புத்தகமானது மக்களுக்கு அதிக பயனளித்து அவர்களுக்குச் சன்மார்க்க நெறியைப் புகட்டுவதற்கு முக்கியமானது. ஆதலால் முஸ்லிம்கள் அதை கவுரவித்து வாசித்தறிந்து நற்பய னடைவார்களென்று நம்புகிறோம்.

கையொப்பம்.

ஹுஸைன் முஹம்மது பின் முஹம்மது கானல்லாஹு லஹுமா.

ஸையிதுமுஹம்மதுஷரீப்பின்ஸையிதுஅஹமது அல்முதர்ரிஸ்ஜமாலியா.

முஹம்மது யூசுப் பின் ஸையிது மக்தூம் அல் முதர்ரிஸ் பில் ஜமாலியா.

பந்தஃ, முஹம்மது மீரான் அபீஅன்ஹு, அல் முதர்ரிஸ் பில் ஜமாலியா.

சென்னை "ஸைபுல் இஸ்லாம்" மானேஜிங் டைரெக்டர் & எடிடர் ஆலீ ஜனுப், மவுலானா மவுலவீ, அஹ்மத் சயீத் சாகிபவர்கள் அபிப்பிராயம் வரைந்து கையொப்பமிட்டுள்ளதைப் பின்வருமாறு காண்பீர்களாக :—

இஸ்லாஹுல் முல்ஹிதீன் ம. அ. ஹிபாஜத்துல் முஸ்லிமீன்.

மேல்விசாரம் ஜனுப் பாவலர் க. முகம்மது இப்ராஹீம் அஹ்ஸன் சாகிபவர்களால், இயற்றிய மகுடத்தில் கண்ட நாமம் சூட்டப்பெற்ற நூலின் கையெழுத்துப் பிரதியைப் படித்தேன். இப்பாடல் நூலில் கள்ள மஷாயிகுகள், கபடசந்நியாசிகள், மார்க்கப்புறட்டர்கள், தங்களின் பசப்புவார்த்தைகளால் மார்க்கமறியாத பாமரமக்களை தங்கள்மாய வலையில் சிக்கவைத்து, வழி கெடுத்துவரும் துன்மார்க்கச் செயல்களை கார்க்கக் கட்டளைக் கேற்றவாறு பலமாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

மார்க்கப்புரட்டர்கள் நம் தமிழ்நாட்டில் மலிந்து பாமரமக்களை வழிகெடுத்து வருகிறார்களென்ற புகார் நமது பத்திரிகாலயத்திற்கு பலவிடங்களிலிருந்தும் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

இவ்வித மார்க்கப்புரட்டர்கள் மலிந்த இக்காலத்தில், இவ்வித மார்க்க உபதேச நூலை ஒவ்வொரு தமிழ் தெரிந்த முஸ்லீமும் வாங்கிப்படித்து மார்க்கப்புரட்டர்களின், மாயவலையில் சிக்காமல் தாங்கள் தப்பித்துக் கொள்வதோடு பாமரமக்களுக்கும் படித்துக்காட்டி அவர்கள் மார்க்கப்புரட்டர்களின் மாயவலையில் சிக்கி வழிகெட்டுப் போகாமல் செய்யவேண்டியது அவர்களின் கடமையாகும்.

மார்க்கப் புரட்டர்கள் கள்ள மஷாயிகுகள் கபட-சந்நியாசிகள் போதிய படிப்பற்ற பாமர மக்களையே, வழிகெடுக்கத் துணிவதால் அதிகப் படிப்பில்லாத சாமான்ய படிப்புள்ளவர்களும் படித்து விளங்கிக்கொள்ளும்படி நாட்டுப்பாஷையில் இப்பாடல் பாடப்பெற்றிருப்பதால், இலக்கிய இலக்கண சுத்தம் இதில் காணப்படவில்லை யென்பதைக் கவனிக்காமல், மார்க்க உபதேசத்தை சாமான்ய ஜனங்களுக்குப் போதிப்பதற்கு இப்பாடல் நூல், மிக மிக சிறந்ததாக இருக்கிறதென்பதைக்கவனித்து இந்நூலை வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக.

M. A. SAYEED,
மானேஜிங் டைரக்டர் & எடிடர்,
"ஸைபுல் இஸ்லாம்", மதருஸ்.

4-வது சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சேக்ரிடரி ஆலிஜனுப் மவுலானு மவுலவி, அல்ஹாஜ் ச. அ. முஹம்மத் அலீ சாஹிபு அவர்களும் ஷை ஹிபாஜத்துல் இஸ்லாம் ஆசிரியர் ஆலீஜனுப், மவுலானு மவுலவீ A. R. அப்துல் றஹீம் சாஹிபு இவர்கள் அபிப்பிராயம் வரைந்து கையொப்ப மிட்டுள்ளதைப் பின்வருமாறு காண்பீர்களாக.

மேல்விஷாரம் ஜனுப், பாவலர் அஹ்ஸன் க. முஹம்மது இப்ருஹீம்சாயபுஅவர்களால் இயற்றப்பெற்ற இஸ்லாஹுல் முல்ஹீதீன் (மஅ)ஹிபாஜத்துல் முஸ்லிமீன் என்னும் நூலை பார்வையிட்டோம். இது இஸ்லாத்துக்கு சரியான நூலாக இருப்பதோடு வழிகேடர்களுக்கு தக்கமறுப் பாகவுமிருக்கிறது. எனவே இதுமுஸ்லிம்களுக்குப் பயன் தரக்கூடிய நூலென்பதில் சந்தேகமில்லை.



மேல்விஷாரம் யூனுனி மேடிகல் ஹாலின் தலைவரும், தேன்னிந்தியாவில் பிரசித்திபெற்ற (வாயிஜ்,) ஆலீ ஜனுப், மா. ம. அப்துல் றஜாக் சாஹிபவர்கள் அபிப்பிராயம் வரைந்துள்ளதைப் பின்வருமாறு காண்பீர்களாக:—

ஹம்து சலவாத்துக்கு பின்னர், எங்கள் ஊர் வாசியாகிய, ஆலீ ஜனுப், பாவலர் (அஹ்ஸன்) க. முஹம்மது இப்ருஹீம் சாகிபவர்களால், இக்காலப் போலி மஷாயிகுகளான மார்க்கப்புரட்டர்களையும், அவர்களின் மாயவலையிற் சிக்குண்ட பாமர ஜனங்களையும் சீர்திருத்தம் செய்ய இயற்றப்பட்ட இஸ்லாஹுல் முல்ஹிதீன் (மஅ) ஹிபாஜத்துல் முஸ்லிமீன். என்னும் ரிஸாலஃவின், கைஎழுத்துக் காபிகளை படித்துப்பார்த்தேன். இதை மார்க்கப்புரட்டர்களான வேஷ மயாயிகுகளும், அவர்களின் சிஷ்யர்களும், மற்று முஸ்லிம் ஆண்பெண்களில், ஷரஜலேசாய் கவனிப்பவர்களும், படித்தமல் செய்ய இந்த ரிஸாலஃ அவசியமென்பதிற் சந்தேகமில்லை.

இப்படிக்கு,

மா. ம. அப்துல்றஜாக்.

3-வது பேரணம்பட்டு சவுக்மஸ்ஜிது மவுலானு மவுலவியும் காஜியுமான ஆலிஜனாப், பஷிருத்தீன் அஹ்மத்சாஹிபவர்கள் உருது பாஷையில் வரைந்து கையொப்ப மிட்டுள்ளதை பின்வருமாறு காண்பீர்களாக :—

بسم اللہ الرحمن الرحیم

الحمد للہ الموفق للحق والصواب والصلوٰۃ والسلام علی من ارسل الینا بالاحادیث وعلی آلہ وصحبہ الی یوم الحساب

اما بعد یہ رسالہ اصلاح الملحدین زبان تمل میں لکہا ہوا ہے اگرچہ میں اس زبان سے اسقدر واقف نہیں ہوں جو اس رسالہ کی عبارت کو بخوبی سمجہہ سکوں۔ لیکن مصنف رسالہ میلوشارم جناب کے محمد ابراہیم صاحب المتخلص بہ احسن نے بعض مضامین اسکے پڑہ سنائے۔ اور اپنی زبان سے وجہ تالیف ظاہر کی کہ جنوبی ہند وغیرہ کے اضلاع کی چند گاؤں میں ملحدوں نے الحاد وکفر کے باتوں سے عوام کو گمرا کر رکہا ہے اور شریعت مطہرہ کے جادہ مستقیم سے انہیں پہیر دیا ہے۔ یہ رسالہ ان کفریات کے رد میں لکہا گیا ہے الحمد للہ علی ذالک۔ چونکہ ملحد پیران علم کی دولت سے بے بہرہ ہوا کرتے ہیں نہ انہیں علمی مباحث سے سروکار نہ دلائل سمجہنے کی لیاقت لہذا ہشیار ناظم نے انکو اور انکے مریدوں کو سمجہانے کا وہ طریقہ اختیار کیا ہے جو کار آمد ہو۔ رسالہ منظوم کو اس رنگ سے پیش کیا ہے جو پسندیدۂ عوام ہو بس یہ ان بستیوں میں جہاں الحاد پہیلا ہوا ہے شایع کرنا بہت مفید ہوگا۔ اور ہر گہر میں ایک ایک نسخہ کا ہونا عقائد فاسدہ کی اصلاح کیلئے از بس ضروری ہے جزی اللہ تعالی احسن جزاء حسنا موفورا وجعل سعیہ مشکورا

حررہ بشیر الدین احمد عفا اللہ عنہ
قاضی وامام مسجد چوک پیرم بیٹ

மதிப்புரைகள் முற்றிற்று.

இந்த இஸ்லாஹுல் முல்ஹிதீன் (மஅ) ஹிபாஜத்துல் முஸ்லிமீன் என்னும் ரிஸாலாவிற் போதிந்த விஷயங்களின் அட்டவணை.

பக்கம்	விஷயம்	பாடற் றொகை
	முகவுரை. வாசகம்	
1	சங்கைபொருந்திய உலமாக்களின் மதிப்புரைகள்.	
9	அவையடக்கம்.	11
11	நூன்முகம்.	45
15	அஞ்ஞானர் கொள்கையு முபதேசமும்.	10
16	முல்ஹிதுகள் - திக்றே போதுமென்பது.	11
17	முல்ஹிதுகள் - முரீது கொடுப்பது. ...	5
18	முல்ஹிதுகள் ஷாஐ தட்டுவது.	7
,,	அஞ்ஞானிகளைத் தொடர்ந்தவர்க் குபதேசம். ...	19
20	ஆலிம்கள் சங்கை.	6
,,	ஷிற்கு குபிரின் தீங்கு.	12
21	முல்ஹிதுகள் தாடியை சிறைத்து மீசையை வைக்கச் சொல்வது.	13
22	முல்ஹிதுகள் சலவாத் சலாமை தட்டுவது. ...	14
24	நிஅமத்தையுண்டு ஷுக்று செய்யார்க்கு தன்பீஃ.	6
,,	முல்ஹிதுகள் தொழுகையைத் தட்டுவது.	83
30	முல்ஹிதுகள் சதகா ஸக்காத்தை தட்டுவது.	20
32	முல்ஹிதுகள் நோன்பைத் தட்டுவது.	9
35	முல்ஹிதுகள் வட்டி வாங்க வழிகாட்டுவது.	9
33	முல்ஹிதுகள் நாடக மாட்டம் பாட்டம் பார்ப்பதாகுமென்பது.	22
35	முல்ஹிதுகள் ஸினாவுக்கு வழிகாட்டுவது.	9
37	முல்ஹிதுகள் மவுத்தாவுக்கு முரீதும், திக்றுமே போதுமென்பது.	8
37	முல்ஹிதுகள் கபுருஸ்தானுக்கு மதிலைகட்டல் வீணென்பது.....	27
39	முடிவுரை.	13
40	துஆ கேட்க தன்பீஃ.	9
41	ஆபியத்தை நாடி ஹக்கனிடம் கேட்கும் முனாஜாத்	9

அட்டவணை முற்றுப்பெற்றது.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஸ்லாஹுல் முல்ஹிதீன்

(ம அ)

ஹிபாஜதுல் முஸ்லிமீன்.

அவையடக்கம்.

காப்புவெண்பா.

சொல்லாலே மூடருக்கு சுபங்கூறும் *இஸ்லாஹில்
அல்லா(ஹ்)றசூல்சொல்லு மனந்தம்பல ஆகமதால்
பொல்லாயஞ் ஞானர்வலைப் புகுதாமல் தீனவர்கள்
சல்லாப பலன்பெருக சாற்றவிறை காப்பாமே. (1)

தோங்கல் இராகம்.

நாயகர்நபீ தீன்பரத்த நஷ்டகஷ்டங்கள் பட்டதுபோல்
பாயமுடனெந்த நபியும்வலி †பஷரும்படவில்லை யதையுணரா
மாயனிபுலீசன் தூதர்பலர் மருங்காமுஸ்லிங்கள் தமைகெடுக்க
ஞாயஷரஉக்கு முன்கரான அஞ்ஞானர்வெளி பட்டார்களே. (2)

ஷறஇன்சட்டங்கள் திட்டமாக சார்ந்தவெளிகோல மாகுமென்றும்
உரமாய்ஷரஆலிம் உண்மைகூறார் ஓயாததுசெய்பு மிதுசெய்யென்பார்
பரமகதிகாட்டு மஅரிபத்தை பற்றஎளிதான பாதைகாட்டார்
திரமாய்திக்கிர்செய்யப் போதுமென்று தீனையஞ்ஞானர் கெடுத்தார்களே.

சலவாத்தும்சலாம் சாற்றுவதிற் சங்கைப்பலனேது மில்லையென்றும்
அலங்காரம்மாக மீசைவைத்து அடியோடுந்தாடி வெட்டுமென்றும்
நலமார்நாதாக்கள் கபுரிடம்போய் நாடும்ஹாஜத்தைக் கேளுமென்றும்
பலவார்பிதற்றியே யஞ்ஞானத்தைப் பரத்திதீனோரைக் கெடுத்தார்களே.

* இஸ்லாஹில் என்பது, சீர்திருத்தத்தில் என்றறிக.

† பஷர்என்பது, மனிதர்.

தொழுகையும்நோன்பும் சதகாஸக்காத் தொடரும்கபுர்ஹஷர் மீஸான்
ஸிறுத்
பழுதும்பாக்யமும் பார்த்தவர்யார் பாரநரகத்தைக் கண்டவர்யார்
அழுத்தமாய்பேசும் ஷரஉடைய ஆலிம்கள் சொல்லை தட்டிநீங்கள்
வழுவாஹூம்திக்கிர் செய்யுமென்ற வண்டரஞ்ஞானர் மிகுத்தார்களே. (5)

தொல்லைஷரஇலே ஹலால்ஹறுமும் துய்யமஅரிபத் தானதிலே
சொல்ஹலால்ஹறு மெதுவுமில்லை சொந்தமாகவே எல்லாம்சரி
நல்லபெருநாயன் கிருபையாளன் நல்திக்கிர்முரீத் பழகினோர்க்கு
வல்லஹலால்ஹறு மில்லையென்ற வழிக்கேடஞ்ஞானர் வந்தார்களே.

வாசியாமூச்சை ஹூஹீஎன்று வாங்கித்தாங்கியே திக்றுசெய்தால்
மாசில்லாவலி யவனுமென்றும் மண்ணிலவன்ஹறும் ஸினுசெயலை
ஆசித்தன்பாக செய்தாலுமாம் ஆதியிடம்பாவீ யல்லவென்று
பேசியஞ்ஞானம்பலவிதமாய் பெரியோன்னபீ தீனைக்கெடுத்தார்களே.

வல்லான்ஆணென்றும் நபிநாயகம் வடிவாம்பெண்ணென்று மனந்த
சல்லாபமாக இருவர்கூடி சகலமக்லூகை *ஜனித்தமாதா [காலம்
நல்லார்நபியென்றும் நமக்குயெல்லாம் நாயன்தான்பிதா வாகுமென்றும்
பொல்லாயஞ்ஞானர் பிதற்றியேதான் புகழார்நபிதீனைக்கெடுத்தார்களே.

வட்டிதின்கவு மாட்டம்பாட்டம் வண்மையொடுபார்ப்ப தாகுமென்றும்
மட்டில்லாஏழை மருமாதரை மனதார்ந்துகலந் துரவாடலும்[வந்தால்
பட்டிதொட்டியில் நுழைந்துநாய்போல் பதுங்கிப்பகர்லோபி ஞானி
அட்டியில்லாமல் செருப்பாலினும் அளிப்பதெவர்க்கெனில்
கேட்பீர்களே. (9)

மார்க்கபரலைந்தி லொன்றையேனு மனமுறண்டாகத் தட்டிவிட்டோன்
பார்க்கபலகாட்சிக் காட்டினும் பராக்கடல்நீர்மேல் நடந்திட்டாலும்
தீர்க்கமுடன்வானிற் பறந்திட்டாலும் தீயாம்நெருப்பள்ளி
யுண்டிட்டாலும்
மூர்க்கனிபுலீசன் தூதனென்றுமுனிந்துமுஸ்லிங்கள் வெறுப்பீர்களே.

சங்கைவல்லானைமறந்தபாவி சாகானபிசொல்லைத் தட்டும்பாவி
பங்கம்உரவுக்கு வருத்தும்பாவி பாங்காம்தீனோரை கெடுக்கும்பாவி
அங்கமுடன்ஞானம் பேசும்பாவி ஆகாச்செயலாகு மென்றபாவி
எங்கட்கிடர்தர வந்தவனே இபுலீசேஎன்று துரத்தகேளீர். (11)

* ஜனித்தமாதாவென்பது, பெற்றதாயார்.

நான் முகம்.

காப்பு வெண்பா.

அருமை ஷரஉணரா அஞ்ஞான மூடர்களும்
பெருமையுடனவர்வலையிற் பிடிபட்ட மாந்தர்களும்
சருகாமற் ஷரஉணர ஜயமிங்கு மங்கும்பெற
மருங்கான அமல்செய்ய மன்னவனே நீகாப்பு.

கஹ்றோஉஸீகு லஹதேஸுவால் ஹோவேகிஸீகூ. என்ற
ஹிந்துஸ்தானீ இராகம்.

பல்லவி.

அருளக்கூடதா அஞ்ஞானிகளை திருத்தக்கூடாதா
அல்லதவரை வெருட்டக்கூடாதா. அருள

அநுபல்லவி சரணுனுபந்தம்.

2. ஹம்தும்சலவாத்தும் அருளியஞ் ஞானிகளே
தெம்பாகிர் நாளுணராத் தீங்கர்களே கேளுமென்று அருள

3. எழுவானம் புவிமலைகள் இதமா யடுக்கடுக்காய்.
பழுதில்லா படைத்தோனை பாதகரே யுணறுமென்று. அருள

4. அவ்வலொளி வாயமைந்து ஆகிர்நபீ யாய்பிறந்து
செவ்வையாய் தீன்விளைத்தோர் செயலை யுணருமென்று. அருள

5. ஷரஅதைப் பேணிஅமல் சருகாசெய் ஷைகுவந்தால்
உரமாய் முரீதவரால் உகப்பாக வாங்குமென்று. அருள

6. ஷரஏவல்தட்டுகின்ற சண்டிபயல் ஞானிவந்தால்
உரமாய்நீ முர்த்ததென உரைத்துமுன் ஒட்டுமென்று. அருள

7. மெஞ்ஞானி ஷைகுஎன்று மிக்கபல வேஷமிட்டு
அஞ்ஞான செயல்பரத்தி அழகியதீ னிழந்தவர்க்கு. அருள

8. தீனேவல் தட்டிவிட்டு திடனுய் முரீதும்பெற
*கோனேவல் தட்டிவிட்ட கொடும்ஷைகு மூதேவிக்கி அருள

* கோனேவல் என்பது, கடவுளேவல்.

9. ஷரஉடைய சட்டமெல்லாம் சார்ந்தவெளி கோலமென்றும்
மரமமெல்லாம் மஅரிபத்தில் மதிப்பெனசொல் மடையருக்கு.()

10. எளிதாக மஅரிபத்தை இருத்தாட்ட மனதிலெல்லாம்
தெளிவாகத் தோற்றுமென்ற திருடரஞ்ஞானருக்கு. அருள

11. மனதால் தொழப்போதும் மருங்காம் திக்கிர்உரமா
தனதாகச் செய்யுமென்ற *தருகணன் மக்களுக்கு. அருள

12. பிற்கால மாமிதிலே பேதையஞ் ஞானிபலர்
கர்க்கான தீனுக்கிடர் கருதி விளைப்பவர்க்கு. அருள

13. வயற்றை நிறப்பிக்கொள்ள வண்மை ஷரஜதட்டி
நயம்பேசி பணம்பரிக்க நாய்போல் திரிபவர்க்கு. அருள

14. ஆதமை கெடுத்த †லஈன் ஆதமக்க ளைகெடுக்க
சூதன்புற மஞ்ஞானம் சொல்லவந்தீர் நீங்களென்று. அருள

15. அல்லா(ஹ்)ஆண் அஹ்மதுபெண் அணைந்தெல்லாம்பெற்றதென
நல்லாக சொல்ஞானி நாதார்நீ காபிரென்று. அருள

16. தந்தைதாய் மக்களுட தவருவிடல் போல்தனியோன்
எந்தளம் தவரும்விட ஏலுமென்ற தடியருக்கு. அருள

17. ஷரஇல் ஹலால்ஹறும் சாற்றுவது மஅரிபத்தில்
அரவேதா னில்லைஎன்ற அஞ்ஞான மடையருக்கு. அருள

18. எங்கள் மஅரிபத்தை யெடுத்துஅமல் செய்பவர்க்கு
பங்கமெதைச் செய்தாலும் பாவமில்லை என்பவர்க்கு. அருள

19. கஷ்டத்தால் மணமுடிக்கான் காசளித்து கன்னியரால்
‡இஷ்கிரக்கல் §ஜாயிஸென்ற இடுமடையஞ் ஞானருக்கு. அருள

20. இன்னு மிதுபோல எத்தனையோ பிதற்றிகொண்டு
வின்னம் விளைத்துவரும் வீணரஞ்ஞானருக்கு. அருள

21. அஞ்ஞானம் பேசிபேசி அழகியதீன் குலத்தவரால்
பஞ்சமாப் பாதகத்தைப் பாரில் பரத்துவர்க்கு. அருள

---

* தருகணன் என்பது, இபுலீசு.

† லஈன்என்பது, லஅனத்துபெற்றவன்.

‡ இஷ்கென்பது, காமம். § ஜாயிஸென்பது, கூடும் அல்லது ஆகும்.

22. பாரினில் மானிடர்கள் பாவம் பரத்துவதால்
*வாரிபோ லாபத்துகள் வல்லோ னிரக்கலென்று. அருள

23. முன்சைனு ஜாபான் முறையாய்பின் கோய்ட்டாவில்
துன்பமடர் நோடீசைத் துய்யோ னிரக்கலென்று. அருள

24. இந்த நோட்டீஸறியா இறையோன் †கஹர்தெரியா
விந்தையாய் பாவவித்தை விதைக்குமஞ் ஞானருக்கு. அருள

25. முடிவுநா ளடையாளம் முடுகுவதை நபியுரைபோல்
துடிப்பாக பேசவந்த தோஷிகளே கேளுமென்று. அருள

ஹ தீ ஸ்

தோங்கல் இராகம்.

முடிவுநாள்வரு மடையாளத்தை மொழிந்தார் நபிஎன பூஹுரைரா
வடிவா யுரைத்ததாய் திர்மதீயில் வரைந்தஒருஹதீ ஸருளகேளீர்[னும்
படியிற் பலர்பங்கா மேதிரிசோத்தை பதுக்கியேதன தென்பார்பின்
அடியர்அமாநித மென்றுணரா அவரேதனதென செலவிடுவார். (26)

ஸக்காத்தைஅப ராதமாயும் சார்ந்தபெரும்கஷ்ட மாய்காடுவார்
ஹக்காம் இல்மதை பொருள்தேடவும் ஆகாபெருமைக்கி படித்திடுவார்
நிக்கா(ஹ்)செய்பத்தா பாரியர்க்கு நிதமாயடங்கியே நடந்திடுவார்
எக்காலும்சுக முரவேபெற்ற எற்றதாய்சொல்லை தட்டிடுவார். (27)

தன்சிநேகர்க்கு உதவிசெய்வார் தந்தைசோற்றட்டி வெறுத்திருப்பார்
முன்னேன்பள்ளியில் வீண்பேசுவார் முரணுங்கூச்சலங் கதிகம்செய்
இன்னும்கௌமுகட் கதிகாரியாய் இடாம்பாஸிக் பாஜிரேர்ப்பார்[வார்
வின்னவழிகேட்டை விளைப்பதற்கு வீணர்உபதேசி கள்மிகுப்பார். ()

இணக்கமறுஇடர் தனைபயந்து இடக்கர்க்கடங்கியே நடந்திடுவார்
குணமறுவேசை யாட்டம்பாட்டங் கொட்டுங்குழலோசை யதிகங்
கொள்வார்
நிணமறுங்கள்ளு சாராயத்தை நெகிழ்ந்தேபகிரங்க மாய்க்குடிப்பார்
இணக்கமுன்னேரை இகழ்ந்தேசுவார் இதுபோலொருகால மணுகு
மென்றும். (29)

---

* வாரிபோ லென்பது, கடல்போல்.

† கஹர்என்பது, கோபம்,

அப்போதுநீங்கள் எல்லோர்களும் ஹக்கன்புறத்ததாப் எதிர்பாருங்கள்
தப்பாமலொரு*புயல்செகப்பாய் தாவத்தரையினி லதற்சையுண்டாய்
ஒப்பமாய்நாசஞ் செயப்படுவார் உரமாய்மனுவுகள் தரையிலாழ்வார்
மெப்பாம்சூரத்தை மாற்றபட்டு மேகங்கல்மாரி பொழியுமென்றும். ()

அதனுலுயிர்பொருள் நாசமாகும் அன்றிஆபாத்து முசீபத்துகள்
சிதராதொடற்சையா யிறங்குவது சிறப்பாயணிமாலே யறுந்தால்மணி
இதமாயொன்றின் பின்னென்றாகவே இறங்குவதுபோல பல இடர்கள்
நிதமாய்வருமென யெம்மிறசூல் நிகழ்த்துங்காலமிக் காலந்தானே.(31)

ஆகையால்ஹக்கன் நபிபேரிலும் ஆகிரத்தின்மே லீமான்கொண்டு
ஜாகைப்புவியினில் மனதிருத்தி சங்கைஜயமிங்கு மங்கும்பெற
ஈகைஇரக்கமா யமல்கள்செய்வோர் இடரஞ்ஞானரால் கண்டவுடன்
கூகையஞ்ஞானம் பரவவிடா கோமான்கஹராய்ந்து நடப்பீர்களே. ()

வேறு. அருளக்கூடாதா என்ற இராகம்.

33. பரவும் பாவச்செயலே பரவவிடா தட்டுவது
உரமான கடமையது உமத்தோர்க் காகுமென்று. அருள

34. பாவமொரு பாவிசெய்யப் பார்த்தவனைத் திருத்தாமல்
ஆவதென்ன வென்றுவிட்டோ னவனுமொரு பாவிஎன்று. அரு

35. மெய்ஞ்ஞானி கள்குறுஆன் மேன்மை ஹதீதுகளை
நெஞ்சாரப் பற்றிஅமல் நேர்மையாய் செய்வாரென்று. அருள

36. அல்லா(ஹ)றசூல்சொல்லே ஆய்ந்து நடப்பவர்க்கு
பொல்லா வினைகளிங்கு மங்கு மணுகாதென்று. அருள

37. ஆலிம்கள் சீமான்கள் அஞ்ஞான ஷைகுகளின்
போலீநடப்பொழிய புண்ணியத்தை நாடவென்று. அருள

38. இன்னும் பட்டேல்மிம்பர் இதமான ஜுமுரிபட்டம்
தென்பாக பெற்றவர்கள் தீனைநிலே நாட்டுமென்று. அருள

39. இந்தஅஞ்ஞானசெயல் எவராய்து சொன்னதென
விந்தையாய் கேள்குகின்ற வீணரஞ்ஞானருக்கு. அருள

* புயல்என்பது, காற்று.

40. மேல்விஷா ரம்அஹ்ஸன் மிக்கபல நாடுசுற்றி
வால்கட் டஞ்ஞானருட வாலறுக்கச் சொன்னதென்று. அருள

41. மார்க்க*மேதாவிபலர் மன தார்ந்தஞ் ஞானருக்கு
கூர்க்கசொல் லுபதேசம் கூர்ந்துவெளி யிட்டதென்று. அருள

42. குற்றங் குறையிதிலே கூர்ந்ததை ஷரஇன்படி
உற்றதை திருத்துவர்க்கு உடையோன் றஹ்மத்தென்று. அருள

43. இச்சிறுநூ லஞ்ஞானர் இடர்க்குபதி லல்லாமல்
மிச்சமெதுங் கூரவில்லை பட்சமுடன் கேளுமென்று. அருள

44. அஞ்ஞானர் கொள்கைக்கு அந்தந்தப் பிரிவுகளில்
நெஞ்சார சொல்ஷரஜ அஞ்ஞான ருக்கெடுத்து. அருள

45. ஆமீன் அல்லாஹும்ம ஆமீன் அஞ்ஞானமது
பூமீதில் பரவாது ஜாமீன்நீ யாகவென்று. அருள

அஞ்ஞானர் கொள்கையு முபதேசமும்.

கஹ்தோஉஸீகு என்ற ஹிந்துஸ்தானி இராகம்.

பல்லவி.

கேட்ககூடாதா அஞ்ஞானிகளே ஓட்டக்கூடாதா
தீனோர்ஷரஜ, நாட்டக்கூடாதா. கேட்க

அநுபல்லவி சரணுனுபந்தம்.

1. ஆலிம்சொல் ஷரகதை அதைதட்டி மஅரிபத்தை
கோலி பிடிக்கஎல்லாங் கூடுமென்ற தடியர்களே. கேட்க

2. அல்லாவு மாகிரத்தும் அமளிநரகமதும்
எல்லாங் கதைகளென்ற இடுமடையஞ் ஞானிகளே. கேட்க

3. கபரும் ஹஷரும்ஸிராத் கனஅமளி கண்டதெவர்
நவமாக இல்லைஎன்று நன்றீமா னிழந்தவரை. கேட்க

* மேதாவிகள்என்பது, உலமாக்கள்.

4. தொழுகையும் நோன்புஸக்காத் தொடர்சதகா புண்ணியத்தைப்
பழுதில்லா கண்ணைகொண்டுபார்த்தவர் யார் என்பவரை. கேட்க

5. சங்கைகுறு ஆனும்ஹதீஸ் சட்டம்வந்த தேதுக்கென்றால்
அங்கமுள வெளிக்கோல மாகுமென்ற மடையர்களை. கேட்க

6. இன்னுமிதுபோல எத்தனையோ பிதற்றிகொண்டு
தென்பாக ஊருலவி தீனைக் கெடுப்பவரை. கேட்க

7. ஷராஐதட்டு மஞ்ஞான சண்டிகளே உங்களுக்குப்
*பரமன்யார் நபியார் பாதகரே சொல்லுமென்று. கேட்க

8. இசுலாத்தை கேவலமாய் எண்ணியிடற் செய்ஞானி
விசுவாச ஜாதிமதம் விளம்படா லோபிஎன்று. கேட்க

9. பரல்வணக்கம் தட்டிடசெய் பாதகரஞ் ஞானியும்மை
உரமாக முர்த்ததென உரைப்போமா என்றவரை. கேட்க

10. அல்லா(ஹ்)அஞ்ஞானருக்கும் அவரின்முரீதுகட்கும்
நல்லா போதித்துதீனை எல்லோரும் நாட்டதுஆ. கேட்க

முல்ஹிதுகள் திக்றே போதுமென்பது.

மேல்படி - இராகம்.

1. எங்கள்முரீதைபெற்று எற்றதிக்கிர் செய்யஎல்லாம்
அங்கமாய் தோற்றுமென்ற அஞ்ஞான மூடர்களை. கேட்க

2. அன்பாக ஹூவாசி அதைப்பழக ஆலமெல்லாம்
தெம்பாக தோற்றுமென்ற திருடராஞ் ஞானிகளை. கேட்க

3. மந்திரஹாவிடுத்து மருங்காம்ஹூ ஹீபழக்க
தந்திரங் காணுமென்ற தரித்திர ஞானிகளை. கேட்க

4. திக்ரிலே ஹூஹீயை தினம்பழகப் போதுமென்றால்
ஷக்கில்லா வேதம்ஹதீஸ் சட்டம்வந்த தேதுக்கென்று. கேட்க

5. முர்ஷது பீருக்கெல்லாம் முன்தலைவர்குத்பவர்கள்
கர்க்கான தீனிலெதுங் கைவிட்ட துண்டாவென்று. கேட்க

* பரமன்என்பது, ஆண்டவன்.

6. அமலிலே முஸ்த்தஹபு அதுதவர குத்துபவர்கள்
தமது மனக்குறைவால் தயங்கிய தேதுக்கென்று. கேட்க

7. முஸ்தஹபைப் பேணுங்குத்துப் முறையுணரா முர்ஷிதுகள்
விசுவாசப் பரலுகளை விடச்சொல்வ தேதுக்கென்று. கேட்க

8. பரலை நிரைவேற்றி பண்பான திக்றுசெயல்
நிரப்பலங் கிர்தமென நேர்நபிசொல் லெவருக்கென. கேட்க

9. பரலுகளை தட்டிவிட்டுப் பண்பான திக்றுமட்டும்
உரமாய்செய் தாலுமதை உடையோனேற் பானுஎன்று. கேட்க

10. அறிந்தொரு சுன்னத்ததை அல்லதட்டல் குபிரேன்று
தெரியாப் பரலைதட்டும் தீங்கரஞ் ஞானிகளை. கேட்க

11. மெஞ்ஞானர் பரல்வாஜிப் மேன்மைசுன் னத்தெவையும்
அஞ்ஞானர் போலதட்டா அமல்செய்வா ரென்பதுவை. கேட்க

முல்ஹிதுகள் முரீது கொடுப்பது.

1. முரீது அஞ்ஞானரிடம் முக்திபெற போயவனில்
*கரீதிசெய் வோர்நரகைக் கருதியே வாங்கலென்று. அருள

2. மனைவி முரீதுபெற மாபாவி ஷைகுயிடம்
வினையுணரா தனுப்புகின்ற வீணரே கேளுமென்று. அருள

3. பெண்கள் முகம்ஷைகு பார்க்கநற் பதவிஎன
பண்பாக சொல்பவனை பழஞ்செருப்பால் பறக்கடிக்க. அருள

4. அயல்மாதர் நெஞ்சிலேகை அமிழ்த்தி முரீதுதரல்
நயசட்டம் வந்ததெதில் காட்டடா லோபிஎன்று. கேட்க

5. பெண்டுக ளுக்குமுரீத் பீர்கொடுக்கும் போதிலவர்
விண்டுசெய் கொடுமைகளைப் பெண்டுகளைக் கேளுமென்று. அரு

* கரீதி என்பது, கிரையம்வாங்கல்.

முல்ஹிதுகள் ஷரஜ தட்டுவது.

மேல்படி - இராகம்.

1. அல்லா(ஹ்)வின் திருமஃரூப் அவர்களுட சொற்செயலாம்
சல்லாப ஷறஜதட்டும் ஷைத்தானஞ் ஞானிகளே. கேட்க

2. ஷாஉமுத வில்லாமல் சங்கைபலன் மஅரிபத்து
திறமாயெவ் வார்கிடைக்கும் தீங்கர்களே சொல்லுமென்று. ()

3. தலைபோல ஷரஅதுவும் தவிரமூன் றும்உடலாம்
அலைமலைய தலையகன்று லங்கமென்ன செய்யுமென்று. கேட்க

4. தலையாம்ஷரஜவிட்டோன் தலையில்லா முண்டமவன்
வலைபட்டோ னவனுமொரு வகைகெட்ட முண்டமென்று. அரு

5. ஷறஏவல் தட்டிவிட்ட சண்டிபயல் செய்த நிக்காஹ்
திரமாய் முரிந்ததென தீன்சட்ட முழங்குதென்று. அருள

6. சங்கை ஷறஜதட்டி ஷைகெனசொல் போலிகளே
செங்கோல்தீ னுயிருந்தால் செருப்படி பறக்குமென்று. அருள

7. ஆகையால் தீனேரில் அஞ்ஞானி வலையிற் பட்டோர்
ஜாகையிதில் நபிஷரஜ சருகாமற் கேளுமென்று. அருள

அஞ்ஞானிகளைத் தொடர்ந்தவர்கட் குபதேசம்.

கஹ்தோஉஸீகூ லஹ்தேசுவால் ஹோவேகிஸீகூ என்றமெட்டு.

பல்லவி.

சொல்லக் கூடாதா ஷறஇன்சட்டம் அள்ளக்கூடாதா
அஞ்ஞான செயலைத், தள்ளக்கூடாதா. சொல்ல.

அநுபல்லவி சரணுனுபந்தம்.

1. சொல்ஷரஜ பற்றுவர்க்கு சொர்க்கமுங்கைப் பற்றார்க்கு
பல்பல நொம்பலத்தின் பாதாள நரகமென்று. சொல்ல

2. அஞ்ஞானி வலையிற்பட்டு ஆகிரத்தை மறந்துகெட்டு
மெஞ்ஞானந் துரந்ததென்று மேன்மைதீ னிழந்தவர்க்கு. சொல்

3. சங்கை ஷராஜபற்றும் ஷைகுவந்தால் கண்டறிந்து
அங்க முடனேமுரீத் அவராலே வாங்குமென்று. சொல்ல

4. அல்லா(ஹ்)ஏ வல்விடுத்து அழகாம்தீ னேதடுத்து
பொல்லா ஞானம்தொடுத்து புவிவாழ்க்கை நம்புவர்க்கு. சொல்ல

5. மனுவாகப் பிறந்ததுயா மவுத்தாவ தற்குஎன்று
அனுதின முந்தெரிந்து அஞ்ஞானந் தொடர்ந்தவர்க்கு. சொல்ல

6. மனுடன் தூங்குகின்றான் மவுத்தவனைத் தொடவிழிப்பான்
இனுமப்போ துஉணர்வா னென்றுநபீ சொன்னாரென்று. சொல்

7. பார்வையைத் திருப்பாமல் பார்க்கின்ற ஆந்தையைப்போல்
மூர்க்கர் அஞ்ஞானிகளால் முறைப்பா ருலகைஎன்று. சொல்ல

8. ஆந்தை விழிக்கும்வேடன் அவன்வலை பட்டபின்னே
மாந்தர் மனுவிளிப்பார் மவுத்துதொட்ட பின்னேஎன்று.சொல்ல

9. அறுபட்டு உயிர்துறப்ப தறியாத ஆடுகள்போல்
வருமவுத்தை யுணராத வம்புலகின் தொண்டருக்கு. சொல்ல

10. ஆடு விளிக்குமோதீன் அறுப்பதற்கு சற்றுமுன்னே
நாடி மனுவுணர்வார் நமனடுத்த பின்னேஎன்று. சொல்ல

11. செத்தப்பின் னவர்களுடன் செய்கைநலம் போலமல்லால்
எத்தா யஞ்ஞானமுரீத் செத்தால் வராது என்று. சொல்ல

12. இந்த வகையுணரா ஏற்ற தீனுக்கிடாய்
அந்தமா யூருலவும் அஞ்ஞான மூதேவிக்கி. சொல்ல

13. அல்லா(ஹ்)வின் அடியரென்றும் அஹ்மதர் உம்மத்தென்றும்
நல்லாக சொல்லிகொண்டு நபிஷராஜ விட்டவர்க்கு. சொல்ல

14. இசுலாமின் வேஷமிட்டு ஏற்ற ஷராஜவிட்டு
துசுமனின் வலையிற்பட்டு துய்யோனை மறந்தவர்க்கு. சொல்ல

15. கலிமாத் தொழுகைநோன்பும் கனத்தஸக் காத்துஹஜ்ஜும்
நலிவாய்கை விட்டவர்கள் நஷ்டமான காபிரென்று. சொல்ல

16. ஈமானும் இஸ்லாமை இதமாய்கைக் கொண்டவர்கள்
சீமானு யாகிரத்தில் ஜெயப்பெரு வார்களென்று. சொல்ல

17. சீமானு யுலகத்திலே செல்வமுடன் வாழ்ந்தாலும்
ஈமா னில்லான்ஹஷரில் ஏழைப்பரி தேசிஎன்று. சொல்ல
18. அற்ப உலகாசை ஆவலதால் அஞ்ஞானர்
சொற்கேட்டு தீனைதட்டும் சோம்பேரி குணத்தவர்க்கு. சொல்ல
19. அஞ்ஞானர் சொல்லைதட்டி ஆலிம்கள் ஏவல்பற்றி
நெஞ்சார நடப்பவர்கள் நேர்சுவன வாதிஎன்று. சொல்ல

ஆலிம்கள் சங்கை.

1. ஆலிம்சொல் கதைகளென்ற அஞ்ஞான மடையர்களே
ஜாலிம்கள் நீங்களொரு ஷைத்தானின் சிஷ்யரென்று. சொல்ல
2. ஆலிம்க ளால்உலகம் அடவாய் நிலைப்பதென்று
போலிகளே இந்தவுரைப் புண்யநபீ சொன்னரென்று. சொல்ல
3. ஆலிம்கள் சொல்லுணரார் *ஆழியில் ஏரிகப்பல்
மாலிமில்லா விட்டவர்போல் மடிவார்க ரகிலென்று. சொல்ல
4. †காலிமேய்ப் போனில்லா கடைகெடுங் காலிகள்போல்
ஆலிம்உரை கேளார்கள் ஆகிரத்தில் கெடுவரென்று. சொல்ல
5. அல்லா(ஹ்) றசூலேவல் அறிவிக்கும் ஆலிம்களால்
பல்லாயி ரக்கணக்காய் பதவிபெற லாகுமென்று. சொல்ல
6. ஆலிம்சொல் கதைகளென அல்லதட்டு மஞ்ஞானப்
போலிகளே உங்களையாம் புகலுவோம் காபிரேன்று. சொல்ல

ஷிற்கு குபிரின் தீங்கு.

1. வலிமார் கபரிடம்போய் வணக்கமுடன் ஹாஜத்தை
சலியாமற் கேளுமென்ற ஷைத்தானஞ் ஞானருக்கு. சொல்ல
2. கலிமா மொழிமறந்து கபுருகளை பூஜைசெய்து
நலிவாக கேட்பவர்கள் நபியும்மத் தல்லவென்று. சொல்ல

* ஆழி என்பது, கடல். † காலி என்பது, பசு.

3. மாண்டோர் கபரிடமாண் மருங்காம் ஸியாரத்துடன்
வேண்டுவ தோதிஎத்த வைப்பது ஜாயிஜென்று. சொல்ல

4. அக்தாபு குதுபுவலி யாகிலும் ஜியாரத்துக்கு
*மக்புரா மாதர்புகல் மாப்பெரும் பாவமென்று. சொல்ல

5. ஏவலுண ராபெண்கள் இன்பாய் கபுரிடம் போய்
பாவத்தின் மூட்டைகட்டா பண்பா யிருங்களென்று. சொல்ல

6. கோவில்போம் காபிரைபோல் கொண்டாடி முஸ்லிமக்கள்
மேவிகபுர் பூஜிப்போர் மேன்மையறுங் காபிரென்று. சொல்ல

7. கல்லை வணங்குவரும் கபுரைபூ ஜிப்பவரும்
எல்லை யுடனிவர்கள் இருகூட்ட மொன்றேஎன்று. சொல்ல

8. மதிப்பாக ஷிர்குசெய்யும் மாந்தர் மரணமில்லாப்
பதியிலே எவரிருந்தார் பாதகரே யுணருமென்று. சொல்ல

9. சிலகால வாழ்வுணரா ஷிர்குசெயல் செய்துசெத்துப்
பலகால மெறிநரகில் பரதவிப்ப தேதுக்கென்று. சொல்ல

10. நாடினால் பாவங்களை நான்பொருப்பேன் ஷிர்கைமட்டுங்
கூடிப் பொருக்கேனென கோமான் வகுத்தானென்று. சொல்ல

11. ஷிர்குச்செய் தோன்அமல்வான் செல்லாது அவன்தீனை
பற்குசெய்த முஷரிக்கென படைத்தோன்நபிசொன்னாரென்று.

12. ஷிர்குசெய்ய உபதேசம் செப்புமஞ் ஞானிகளே
மூர்த்ததாய் சாகாமல் முன்தவ்பா செய்யுமென்று. சொல்ல

முல்ஹிதுகள் தாடியை சிறைத்து மீசையை வைக்க சொல்வது.

1. சுன்னத் செயல்வெறுத்து சொகுசாய் தாடிசிரைத்து
தன்மை மீசைவிடசொல் தடிபயலஞ் ஞானருக்கு. சொல்ல

2. சுன்னத்து சுன்னத்தென்று சொல்வதெல்லாம் நபியுடைய
அன்பான சொல்செயலு மாகும்சுன் னத்துஎன்று. சொல்ல

* மக்புரா என்பது, தர்காவைப் போன்றது.

3. நாயகர் சொல்செயலை நானிலத்தில் விட்டவர்கள்
மாயனிபு லீசுடனே மடிவார் நரகிலென்று. சொல்ல

4. இன்பாக தாடியதை இபுறூஹீம் நன்னபியும்
தெம்பாக நம்நபியும் திட்டமாய் வைத்ததென்று. சொல்ல

5. முகத்துக் கலங்காரம் மூமினோர் தாடிவைத்து
உகப்பாக மீசைவெட்ட உண்மைநபீ சொன்னாரென்று. சொல்ல

6. நாயகர் நபிசுன்னத்தை நன்றும்மத்தோர் விடலால்
மாயபஞ்சம் பலநோய்கள் மன்னோ ஸிறக்கலென்று. சொல்ல

7. அலங்கார மாண்பெண்ணை யவர்தாடி தலைமுடியால்
நலம்செய் வல்லான்தஸ்பீஃ நவில்கிறார் அமரரென்று. சொல்ல

8. தாடிமுகத்தழகை தட்டி * தையல் முகம்போல்
நாடி தாடிசோரண்டல் நசாருக்கள் நடப்பு என்று. சொல்ல

9. தாடித் தனைசிரைத்துத் தடிப்பாக மீசைவைத்து
நாடித் திரிபவர்கள் நபியும்மத் தல்லவென்று. சொல்ல

10. துடுக்காய் தாடிசிரைத்து துடப்பம்போல் மீசைவைத்து
முடுக்காகத் திரிவதது முழுகுடியர் நடப்புஎன்று. சொல்ல

11. ஆணுக் கடையாளம் ஹக்கன் அமைத்துவை
வீணுக்கென தாடிவெட்டும் வீணரே யுணருமென்று. சொல்ல

12. பட்சிபல விலங்கினங்கள் பார்த்தாண்பெண் ணடையாளம்
லட்சணத்தைக் கண்டேனு மிக்ஷ்கூஷணமே தாடிவைக்க. சொல்

13. உரைத்த நல்மாராய முணர்ந்துஅஞ் ஞானிகளே
சிரைக்காமல் தாடிவைக்க செப்புமுப தேசமென்று. சொல்ல

முல்ஹிதுகள் சலவாத் சலாமைத் தட்டுவது.

1. சலவாத் சலாமுடைய சங்கை யறிந்துணரா
பலவாராய் பிதற்றுகின்ற பாதகராஞ் ஞானருக்கு. சொல்ல

2. அல்பகலும் சலவாத்தை அன்பாக சொல்பவர்க்கு
பல்பல பாக்கியமும் பண்புமிரு லோகிலென்று. சொல்ல

---

* தையல் என்பது, பெண்

3. சொல்செயலில் சலவாத்தை சுருபமில்லான் னபிபேரில்
நல்விதம் சொல்பவர்க்கு நல்பறக்கத் தாகுமென்று. சொல்ல

4. சலவாத் தோதிகேட்கும் சங்கைதுஆ நாயனிடம்
நலமாக ஏர்க்குமென நபிபெருமான் சொன்னதென்று. சொல்ல

5. அல்லா(ஹ்)இடத்தில்மனு அடியர்கள் யாம்போட
நல்லா இஷ்டாம்புஒட்டல் நல்சலவாத் தோதலென்று. சொல்ல

6. ஆகையால் தீனோர்கள் அஞ்ஞானி சொல்லைதட்டி
ஜாகைப் புவியைநம்பா சலவாத்தை யோதுமென்று. சொல்ல

7. ஒருகாசும் செலவுயில்லா உரைக்கும் சலாம் பலனுணரா
மருக்குமஞ் ஞானிகளே மடையர்களே கேளுமென்று. சொல்ல

8. முசுலிமைக் கண்டமறு முஸ்லிம் சலாமுரைக்க
விசுவாச மாய்குறுஆன் வேதம் முழங்குதென்று. சொல்ல

9. ஆண்பெண்க ளொன்றுக்கொன்று அடவாய் சலாமுரைக்க
வேண்டும் ஜரூரத்தென வேந்தர்நபீ சொன்னாரென்று. சொல்ல

10. ஒருவர்க் கொருவர்சலாம் உகப்பாய் பரத்துவது
அருமையாய் தீனவரில் அன்பை நிறப்புமென்று. சொல்ல

11. சந்தித்தால் முஸ்லிமை சாற்றும் சலாமெனவே
அந்தமில்லான் திருத்தூதர் அன்பாக சொன்னதென்று. சொல்

12. சலாமிலே நூறுபலன் சாற்றுவர்க்கு தொண்ணூரும்
சலாமுக்கு பதிலுரைக்க சங்கைபலன் பத்தென்று. சொல்ல

13. எதிர்கொண்ட பசுவுடனே எதிர்த்தபசு பேசாபோல்
பதியிலெதிற் முசுலிம்சலாம் பகரார்கள் பாவியென்று. சொல்ல

14. இந்தப் பலனுணரா ஏற்ற சலாமுரைக்கா
அந்தமாய் திரியுகின்ற அஞ்ஞான மூதேவிக்கி. சொல்ல

நிஅமத்தையுண்டு ஷுக்று செய்யார்க்கு தன்பீஃ.

1. எல்லாம் படைத்திரண மீந்தாளு மிறையவனை
நல்லா வணக்கம்ஷுகுர் நாடிச்செய் யாதவர்க்கு. சொல்ல

2. வல்லானின் நிஅமத்துண்டு வண்மைஷுகுர் செய்யார்க்கு
அல்லா(ஹ்)வின் நிஅமத்துண்ணல் ஆகும் ஷரும்என்று. சொல்

3. தனியவன் தந்ததுண்டு தக்கஷுக்குர் வணக்கமில்லா
பணியாத மக்களெல்லாம் பாழ்நரக வாதியென்று. சொல்ல

4. அல்பகலும் அல்லா(ஹ்)வை ஐவேளை வணங்கி ஷுகுர்
நல்விதம் செய்ஜடலம் நரகிற் புகுதாதென்று. சொல்ல

5. அல்லா(ஹ்) தரும்நிஅமத் தடவாக உண்டுஷுகுர்
நல்லா செய்யாமற்தட்டும் நாதாரஞ் ஞானருக்கு. சொல்ல

6. *அறுவருப்பின் நீரிலாம் அஞ்ஞான மடப்பயலே
சருகாது உண்பதுபோல் சாகாணை வணங்குமென்று. சொல்ல

முல்ஹிதுகள் தொழுகையை தட்டுவது.

1. தொழுகா சோம்பேரிமிகு தொடர்ந்த இக்காலத்திலே
முழுதுமே தொழுகைவிட மொழியுமஞ் ஞானருக்கு. சொல்ல

2. இசுலாம் காபிர்க்கிடையில் இருக்கும்வித் யாசமது
விசுவாசத் தொழுகைஎன வேந்தர்நபீ சொன்னதென்று. சொல்

3. பாதகக் காபிர்க்கிடை பற்கறியா பாமரர்க்கு
சாதகமாய் தொழுகைவிட சாற்றும் சண்டாளருக்கு. சொல்ல

4. தொழுகையைத் தட்டுகின்ற துஷ்ட அஞ்ஞானிகளே
பழுதில்லா தொழுமகிமை பகரவே கேளுமென்று. சொல்ல

5. தொழுதால் ஈமான்துலங்கும் தொழிவில் பறக்கத்தென்றும்
பழுதுக ளகலுமென பகர்ந்தார்நம் நபியுமென்று. சொல்ல

* அவவருப்பின் நீரிலாம் என்பது, கரூஹியத்தான விந்தால்.

6. தொழுகானுக் கீமானும் துய்தாக இல்லேஎன
அழுத்தம் மாகவேஹதீஸ் அடவாக வந்ததென்று. சொல்லி

7. துனியாவு மாகிரத்தில் துய்யபல சுகத்தைபெறல்
பனியாத மக்கள்தொழும் பாங்கான தொழுகைஎன்று. சொல்ல

8. தொழுகைத் துய்யோனிடமும் துய்யகம் நபியிடமும்
அழுத்தப் பிரதானகடன் அடியர்மே லாகுமென்று. சொல்ல

9 இந்தப்பிர தானகடன் இருத்தாட்டி ஜெயமடியர்
அந்தமாய் பெருவதற்கு ஹக்கன்நபி அருளலென்று. சொல்ல

10. ஊர்மஹல்லாக் காரர்கள் ஒரிடம் சேர்ந்தவர்கள்
நேர்மையாய் தொழுகபள்ளி நிச்சயமாய் கட்டலென்று. சொல்ல

11. இதுபோல ஈதுகாவு மேற்றமாய் ஜாமிஆவும்
பதுமையாய் கட்டலது பாங்கான தொழுகைக்கென்று. சொல்ல

12. மிம்பர்மிஹ்ரு புகத்தீப் மோதீன் பட்டேலு என்றும்
தெம்பா யமைப்பதெல்லாம் திவ்யமாந் தொழுகைக்கென்று. ()

13. இதுபோல நோன்புஸக்காத் திருத்தாட்ட கட்டடங்கள்
பதுமையாய் கட்டியில்லா பாரடாஅஞ் ஞானியென்று. சொல்ல

14. தொழுகை எதுக்கென்று தொண்டுலக மாந்தருக்கு
பழுதூட்டு மஞ்ஞானப் பாதகரே கேளுமென்று. சொல்ல

15. அறிவது எத்துமுதல் அடுக்கு மவுத்துவரை
தரிபாடாய் தொழவுமென தக்கமறை கூறுதென்று. சொல்ல

16. பஜரை தரக்குசெய்தோன் பண்பீமா னவனைவிட்டும்
நிஜதூர மாகுமென நேர்நபி தம் வார்த்தையென்று. சொல்ல

17. நன்று லுஹரை விட்டோன் நபிமார்யா பேரைவிட்டும்
வென்றியவன் தூரமென வேந்தர்நபி விளம்பலென்று. சொல்ல

18. அருமை அஸரைவிட்டோன் அமரர்யா பேரைவிட்டும்
சருகிட்டான் தூரமென சங்கைநபி சொன்னுரென்று. சொல்ல

19. இன்பா இஷாத்தொழுகான் எற்றறஹ் மானைவிட்டும்
சென்றிட்டான் தூரமென செம்மல்நபி சொன்னுரென்று.

20. ஈமானும் நபீவானேர் எற்றபுர் கானும்வல்லான்
ஆமாய் தூராகசெய்யும் அஞ்ஞானர் கேளுமென்று. சொல்ல

21. தொழுகானை குத்தவெட்ட தொடர்ந்தடிக்க * கைதுசெய்ய
நழுவாமல் நான்குஇமாம் நவின்றதை யுணருமென்று. சொல்ல

22. இதையுணரா ஞானிகளே இசுலாம் † தௌலத்திருந்தால்
சிதைத்து வதைப்பாருமை சீர்தூக்கிப் பாருமென்று. சொல்

23. முல்ஹிதுகள் முன்னெடுப்பில் முஸ்லிங்களை மறுட்டுவது
பல்காட்ட மிட்டுதொழல் பாதகமா மென்பவர்க்கு. சொல்ல

24. அரசேவற் போலகுடி ஹாலராய் நடக்கருறை
திரமாக நேர்ந்தாலுந் தீங்கணுகா தென்றவர்க்கு. சொல்ல

25. அரசனுக்கு மாற்றஞ்செய் யவன்ரைய் யத்துகளை
உரமான தண்டனைகள் உடனே விதிப்பானென்று. சொல்ல

26. இதுபோல ஐவேளை இறைஏவற்படி தொழுதால்
பதுமையாய் பரிசளிக்கப் படைத்தோனே போதுமென்று. ()

27. ஷரஉடையோர் தொழுகையிலே சாரும்பல நாட்டமென்றும்
திரமாயெம் திக்றுசெய்ய தீங்கணுகா தென்பவர்க்கு. சொல்ல

28. வணக்கமும் திக்ரிலெம்மில் வஸ்வாஸு இபுலீசால்
இணக்கமா யில்லைஎன்ற இடுமடையஞ் ஞானருக்கு. சொல்ல

29. மாணிக்கம் போலயொற்ற மருங்கீமான் ‡ஜவ்ஹரெம்மில்
காணிக்கை யாயுள்ளதைக் களவாணி தேடலென்று சொல்ல

30. திரவிய முள்ளபெட்டி திருட்டுபயல் தேடிடல்போல்
திராஈமான் ஜவ்ரதை தேடுகிறுன் லகுனத்தென்று. சொல்ல

31. ஈமானின் ஜவ்ஹரில்லா இடுமடையஞ் ஞானியிடம்
ஆமாய் §சூமன்வஸ்லாஸ் அணுகா திருப்பதென்று. சொல்ல

32. இதனலே அஞ்ஞானி ஈமானில் லானினிடம்
நிதகுபிரைக் கண்டிபுலீஸ் நெருங்காமல் விடுவதென்று. சொல்

33. உம்தொழுகை ஐவேளை ஓயாமனத்தொழுகை
நம்தொழுகை யாகுமென்ற நாதாரஞ் ஞானருக்கு. சொல்ல

* கைது என்பது, ஜெயிலில் அடைக்க.
† தௌலத்தென்பது, செங்கோல்.
‡ ஜவ்ஹர் என்பது நவரத்தினதிகள். § சூமன் என்பது, இப்லீசு.

34. மனத்தொழுகை போதுமென்றால் மனைவியுடன் கூடாமல்
இணக்கமாய் பிள்ளைபெற ஏலுமா என்றவரை. கேட்க

35. நடக்கா வாகனமில்லா நாடிடு மயலூரை
கடக்க முடிந்திடுமா கசடரே சொல்லுமென்று. கேட்க

36. தட்டத்தி னுணவையள்ளி தானூட்டா வாயிற்குள்ளே
சட்டமாய் புகுந்திடுமோ சண்டிகளே சொல்லுமென்று. கேட்க

37. வயரார உண்டதுபோல் வம்பனேயுன் மனம்நாட
நயமாய் நிரம்பிடுமோ நாதாரே சொல்லுமென்று. கேட்க

38. ஹர்க்கத்து செய்யாத அமலுந் தொழில்களிலும்
பர்க்கத்தும் பலனுமில்லைப் பண்பாகத் தொழுகுமென்று. சொல்

39. ஆதி விதித்தபடி ஐவேளை யுந்தொழுகா
நீதியென விட்டவர்கள் நெடியபெறுங் காபிரேன்று. சொல்ல

40. விசுவாசமாந் தொழுகை வேளையைந்தும் விட்டவர்கள்
இசுலாத்தின் சட்டம்விட்ட இபுலீசின் மக்களென்று. சொல்ல

41. அறிந்தொரு வேளைத்தொழான் அவன்காபிர் என்னும்ஹதீஸ்
தெரிந்தென் னுளுந்தொழுகா தீங்கர்களே கேளுமென்று. சொல்

42. வேசத்தைக் காட்டவெகு வேடிக்கைப் பார்க்கவெள்ளி
ஆசையுடன் ஈதுதொழு மஞ்ஞானி சிஷ்யருக்கு. சொல்ல

43. நீங்கள் பஜர்ளுஹர் நேர்அஸர் மங்ரிப்இஷா
ஏங்கித்தொழுபவர்போல் யாம்தொழுகோ மென்பவர்க்கு. சொல்

44. ஜும் ஆ ஜும்ஆத்தவரா சோம்பலில்லா தொழுபவர்யாம்
உமக்குவரு மைவேளை உயர்நீட்ட மென்பவர்க்கு. சொல்ல

45. தொழுகை வேளைபாரோம் துடராய் ஜுமஆத் தொழுவோம்
பழுதாக உம்மைபோல் பார்க்கோம் வக் தென்பவர்க்கு. சொல்ல

46. ஆண்டி லிரண்டீதும் அல்லதெட்டில் ஜுமஆவும்
வேண்டுந் தொழுகைத்தொழும் வீணரே யுணருமென்று. சொல்

47. ஜும்ஆவின் ஜுவெடுத்து சு கொடுக்க சும்மாப்போல்
ஜும்மா மட்டுந்தொழுவோர் சும்மாத் தொழுதீர்களென்று. ()

48. வருட மெல்லாமேபரல் வணக்கம்விட்டு வாஜிபை
இருபெருநாள் மட்டுந்தொழ ஏதும்பல னில்லைஎன்று. சொல்ல

49. ஒருநேரத்தொழுகையது உத்தமர் தவரகண்டால்
சிருமையாய் சிந்தையிலே நொந்தழு வார்களென்று. சொல்ல

50. தக்பீர் தஹ்ரீமொன்று தவறினதால் சித்தீக்
அக்பர் றலியவர்கள் அழுது சலித்தாரென்று. சொல்ல

51. அவ்வலாம் வக்த்துஅஸர் அதுதவர உமரவர்கள்
செவ்வை கஜூர்தோட்டம் செய்தனர் தானமென்று. சொல்ல

52. பரவைகள் சப்தம்கலல் பரல்தொழயி லானதென்று
அறஞ்செய்தார் தோட்டமொன்றை அண்ணல் உதுமான்என்று

53. கண்மணி யானஹுஸைன் கர்பலா காயம்பல
பண்பாகப் பட்டுந்தொழல் பாதகமே கேளுமென்று. சொல்ல

தோங்கல்.

54. கல்புக்கனியான ஹுஸைனுர்வள்ளல் கர்பலாவென்னும் ரண களத்தில்
முல்லைப்போலொத்த திருமேனியின் முகத்தில்மட்டுமே எழு பத்ரண்டு
தொல்லைகாயமும் பட்டுமவர் துன்பப்பசிதாகக் கொடுமையினுல்
எல்லையுடன்வீழ்ந்தும் தொழுதசேதி இயம்பயஞ்ஞானர் கேட் பீர்களே.

மதனவீ இராகம்

சர்தார்நபீ தோளில்ஹுஸைன் ஏரினுர்சுவார்
முர்தார்ஷுமர் ஹுஸைன்மார்பில் ஏரினுன்சுவார். (55)

வாளையுருவி ஷுமருகத்தல் செய்யநாடவே
சாளையப்ப டாமல்ஹுஸைன் ஷுமரை நோக்கியே. (56)

இன்றைநாளு யாதெனக்கு சொல்லுமென்கவே
சொன்னுன்ஷுமரு வெள்ளியின்நா ளின்றைஎன்கவே. (57)

இந்நேரமெது வென்றுஹுஸைன் ஏங்கிகேட்கவே
சொன்னுன் ஷுமரு வேளையிது லுஹ்ருஎன்கவே. (58)

மிம்பரின்மே லேரிகத்தீப் இருக்குமிந்நேரம்
தெம்பாகவென்றன் மார்பிலேநீ ஏரினுய் சுவார். (59)

எந்தன் றப்பின் அமருக்குநான் ருவியுமானேன்
நிந்தை யில்லா லுஹறுஅதா செய்யநாடுறேன். (60)

வயதெனதில் வணக்கமொரு வக்த்தும் விட்டிலேன்
பயப்படுறேன் லுஹருக்கென்ன பதிலைப் பகருவேன். (61)

சற்றுநேரம் கத்லேயிப்போ தாமிதம் செய்நீ
உற்றலுஹரு தொழுதபின்னுன் நாடல்நடத்துநீ. (62)

என்றுகெஞ்சி கேட்டுதேயமஞ் செய்துதொழுதார்
இந்நாளிற்றொழுகை தட்டும்போலி ஷைகுமிகுத்தார். (63)

அல்லா(ஹ்)வின்மஹ் பூபின்திரு பேரர்ஹுஸைனர்
வல்லானையஞ்சி ரணகளதித்தில் பயந்துதொழுதார். (64)

எல்லாசுகமு மிருந்துமிப்போ இறையோனைத்தொழார்
அல்லாவின்திரு முன்பிலென்னப் பதிலைத் தருவார். (65)

வேறு சொல்லக்கூடாதா.

66. தாடி சடைவளர்த்து தலைப்பாஷா யாவணிந்து
கூடி தீனைகெடுக்கும் கொடும்ஷைகு மூதேவிக்கி. சொல்ல

67. தொழுகையை ஐந்தோகுத்தும் சோம்பாமல் தொழுபவரை
பழுதில்லா பதிசோர்கம் பண்பாக தேடுதென்று. சொல்ல

68. எல்லா அமல்களிலும் ஏற்றஅமல் தொழுகையென
அல்லா(ஹ்)வின் திருமஹ்பூப் அன்பாய்சொன் னார்களென்று. ()

69. ஏற்றப்பலனளிக்கும் இறையோன்தொழுகையதை
மாற்ற மனுகாமல் மருங்காய் தொழுங்களென்று. சொல்ல

70. தொழுமசலாவறியார் தொழுதுதா னென்னபலன்
அழுத்தமாய் பலன்பெருக அருளுவதைக் கேளுமென்று. சொல்

71. தொழுகை மசாயல்களை துய்தாயறிந்து உலு
பழுதில்லா தெடுத்துபின்னே பாங்காய் தொழுங்களென்று. ()

72. தொழுகையி லுள்ளபரல் வாஜிபு சுன்னத்துவும்
பழுது மக்றூஹறிந்து பாங்காய் தொழுவதென்று. சொல்ல

73. உலகத் தொல்லை கணக்கை உரபாடமிடுவதுபோல்
துலக்குந் தொழுமசலாத் தொகுத்தறிய வேண்டுமென்று. ()

74. காய்கரி வாங்கையிலே கருதிநோட் டமிடல்போல்
வாய்க்கும் தொழுகைதொழும் வகையறிய வேணுமென்று. ()

75. அருமை ஜமாஅத்துடன் ஹாலருய் தொழுவதினல்
இருபத்தி ஏழுபலன் எனவேநபீ சொன்னுரென்று. சொல்ல

76. முன்னேரத் திற்றொழுக முன்னேனில் தீபரமாய்
சென்றுகு பூலாகுமென செம்மல்நபி வார்த்தைஎன்று. சொல்ல

77. நேரமும் வுலுவும்றுக்கூ நேர்ஸஜ்தா நிரப்பமில்லா
வீரமுடன் தொழுதாலும் வேந்தனிடம் செல்லாதென்று. ()

78. அத்தொழு கையருளு மெண்கெடுத்தாப் போலவுன்னை
கத்தன் கெடுக்கவென கழரும் பத்துஆவென்று. சொல்ல

79. நிரப்பமா யடியன்தொழ நிரப்பியொளிதட்டதிலே
*பரமன்முன் வைக்கஅதை பக்ஷமா யேற்பானென்று. சொல்

80. ஆகையால் தொழுமசலா வறியா ரறிந்துதொழ
ஏகன் தௌபீகுதர இயம்பின தாகுமென்று. சொல்ல

81. இத்தாதி நலம்பொலங்கள் இருக்குந் தொழுகைதட்ட
†குத்தாப்போ லலைந்துமுரீத் கொடுக்கும்பீர் மூதேவிக்கி. சொல்

82. சிந்தைமா ருபதேசம் சிறந்தோன் தொழுகைவிட
விந்தைசொல் ஞானிவந்தால் விறட்டித் துரத்துமென்று. சொல்ல

83. அல்லா அஞ்ஞானருக்கும் அவர்வலைபட்டவர்க்கும்
நல்லாஹி தாயத்தந்து நன்றஹ்ஸ ஞகதொழ. சொல்ல

முல்ஹிதுகள் சதகா ஸக்காத்தை தட்டுவது.

1. சதகா ஸக்காத்துபலன் சார்ந்துணரா அஞ்ஞானர்
பிதற்றியே ஊருலவும் பித்தர்களே கேளுமென்று. சொல்ல

2. பணத்தைப் பதுக்கிவைத்து பகலிரவுங் கொண்டாடும்
குணத்தவரைத் திருத்தாத கொடியவஞ் ஞானருக்கு. சொல்ல

3. பிறக்கைபி லிறக்கயி லில்லா திடைநடுவிற்
சிறந்தோன் தரும்பொருளில் சீர்அறஞ் செய்யுமென்று. சொல்

---

* பரமன் என்பது, ஆண்டவன்.

† குத்தாப்போல் என்பது, நாயைபோல்.

4. எடுக்க எடுக்கதண்ணீர் ஏரூற்று கேணியைபோல்
கொடுக்க கொடுக்கசேல்வம் கூடும் சீமானே என்று. சொல்ல

5. கொடுத்த தெல்லாமெடுத்து கொஞ்சங் கேட்டுங்கொடுக்கா
கடுகடுத்த லுத்தர்முதல் கடைகெட்டு போகுமென்று. சொல்ல

6. நாயன் தருமுதலில் நார்ப்பதுக் கொன்றுஸக்காத்
நேயமுட னளிக்கார் நெருப்புக் கிறையேஎன்று. சொல்ல

7. ஸக்காத்தை தட்டளித்த சண்டிப்பயல் காறுன்
எக்காலும் புதைகுவதை ஈனரே யுணருமென்று. சொல்ல

8. காய்க்கு மரமென்று கருதிவந்த ஏழைகள்மேல்
காய்க்கா மொட்டைமரம்போல் கடிந்தனுப்பல் கூடாதென்று. ()

9. பசித்த ஏழைப்பலர்க்கு பங்கிட உம்வசத்தில்
நசியாமல் செல்வம்பொருள் நாதன் னளித்ததென்று. சொல்ல

10. காணி பூமிதோட்டங் கட்டடத்தி னுசையினுல்
வீணிலறஞ் செய்யார்கள் வெருங்கையாய் போனுரென்று. சொல்

11. நாகைப் பழமொப்பாம் நல்தான வான்சொத்து
ஈகையில் லான்சொத்து எட்டிப்பழ மொப்பென்று. சொல்ல

12. எட்டிப் பழுத்தென்ன ஈகையில்லா னிருந்தென்ன
குட்டிச் சுவரவனைக் காணவே மேலென்று. சொல்ல

13. உள்ளதில் தானமிடா உலோபியை தேடிமவுத்
தள்ளவோர் காசெடுக்கா தரையிற்பு குந்தாரென்று. சொல்ல

14. ஏழுலகை யோரரசா யாண்டாலும் தானமதைப்
பாழுலகிற் செய்யார்போம் பயணம்பரி தேசிஎன்று. சொல்ல

15. அறஞ்செய் வாரைசுவன மாவலாய் தேடுதின்னும்
பரமலுத் தரைநிதம் பாழ்நரகந் தேடுதென்று. சொல்ல

16. சகீயாளர் அல்லாவின் சங்கையாந் தோழரென்றும்
பகீலர் படைத்தோனின் பகைவர்க ளாகுமென்று. சொல்ல

17. மாண்டாலுந் தானவான் மாநிலந் தன்னில்பெயர்
தீண்டா மணிவிளக்காய் திடனுப்வி ளங்குமென்று. சொல்ல

18. ஸக்காத்து சதகாவால் சார்ந்த பலனுணரா
இக்காலத் தஞ்ஞான இடுமடையர் சீஷருக்கு. சொல்ல

19. அல்பகல் பொருள்தேடி அதைததனக் கெனநாடா
கல்நெஞ்சார் காலம்வந்த கசட ரஞ்ஞானருக்கு. சொல்ல

20. அல்லா(ஹ்) விதித்தஸக்காத் தல்லதட்டு மஞ்ஞானர்
பொல்லாத முர்த்ததென புகலுவோம் நாங்களென்று. சொல்ல

முல்ஹிதுகள் நோன்பை தட்டுவது.

1. மாதம் றமலான் நோன்பை மருங்காக வைக்கவிடா
போதனைசெய் யஞ்ஞானப் போலிகளே கேளுமென்று. சொல்ல

2. ஓயாமல் சஹரிப்தார் உங்கள் நோன்பாளருக்கு
ஆயாச முவ்வேளை அறுந்துவர்யா மென்பவர்க்கு. சொல்ல

3. நாளுக்கோர் நாஷ்டாவும் நலிந்ததுபோல் சாப்பாடும்
பாலும் வயர்நிரப்பா பக்தர்யா மென்பவர்க்கு. சொல்ல

4. அடுத்தடுத்து சஹரிப்தார் அருந்திநோன் பென்பார்போல்
கடுத்தப்பசி யானும் கருதியுண்ணே மென்பவர்க்கு. சொல்ல

5. பரலான நோன்புவைக்கப் படைத்தோன்றன் புறுகானில்
உரமாக சொன்னதுபோல் உண்மைநபீ சொன்னரென்று. ()

6. மாதம் றமலானேன்பை மருங்காக வைத்தவர்கள்
நீதமா யாகிரத்தில் நேர்ஜெயம் பெருவரென்று. சொல்ல

7. செய்புமொரு அமலுக்கு சிறப்பாம் றமலானதிலே
மெய்யாயி ரம்பலன்கள் மேலோன் தருவானென்று. சொல்ல

8. மாதம் றமலான்பகல் மாடாடுபோலே தின்போர்
போதமுட னுகிரத்தில் புகுவார் நரகிலென்று. சொல்ல

9. மூர்க்கமாய் நோன்பைவிட மொழியுமஞ் ஞானிகளே
மார்க்கத்திலும் கைசெல்லா மானங்கேட்டு போவீரென்று. ()

முல்ஹிதுகள் நாடக மாட்டம் பாட்டம் பார்ப்ப தாகுமென்பது.

1. ஆட்டம் பாட்டம் பார்ப்பதாகுமென அஞ்ஞானர்
தாட்டியாய் போகசொல்லும் தடியர்களே கேளுமென்று. சொல்

2. அன்பாகிர் கேற்றஅமல் ஆவலுடன் செயகேட்க
தென்பாக போகுவர்கள் தீஞேர்நல் நாட்டமென்று. சொல்ல

3. ஆட்டம் பாட்டக்களரி அடர்பாவந் தலம்போக
நாட்டமுற் ஞேடமனம் நாடா திருங்களென்று. சொல்ல

4. காதொடுகண் செவிநாக்கு கண்யமன மைம்புலனை
தீதணுகா காப்பவரே திவ்யசோர்க்க வாதிஎன்று. சொல்ல

5. ஐம்புலனை யடக்காம லாடுமாடு போவுலவ
தெம்புபட விட்டவர்கள் தீநரக வாதியென்று. சொல்ல

6. நாவும் அபமிரண்டும் நானிலத்தில் காப்பவர்க்கு
மேவும்பிணை யானெனவே மேன்மைநபி சொன்னுரென்று. ()

7. பாவம் அடர்வதும் பாவம் அகல்வதும்
நாவதினுல் ரண்டுமென நபிபெருமான் சொன்னதென்று. சொல்

8. ஆதமுட மக்களுக்கு அடர்பாவம் நாவைக்கொண்டு
சாதகமாய் மிகைப்படுதென சங்கைநபி சொன்னுரென்று. சொல்ல

9. ஆட்டத்துக் கேகுவர்கள் அங்குகண்ட கொடுஞ்செயலை
தேட்ட மனதிருத்தி தீங்குக்குத் துணிவாரென்று. சொல்ல

10. விரலேக சந்தானுல் விடுவோம் ஜடலமென்று
உரமாகப் பேசுமிந்நாள் உற்றவஞ் ஞானருக்கு. சொல்ல

11. ஆட்டத்துக்கு ஆணுடனே அவர்குடும் பம்அழைத்துக்
காட்டு மிருண்டிகள்போல் கண்களிக்கப் போராரென்று. சொல்

12. மறைவான கோஷாவில் மருங்கா யிருப்பவளை
குறையுராக் கூட்டத்திடம் கூட்டிபோம் பாதகர்க்கு. சொல்ல

13. ஆட்டம் பார்க்கமனையை அலங்காரம் செய்தழைத்து
நாட்டமாய் போமாளன் நாணங் கெட்டவனென்று. சொல்ல

14. நாடகம் பலவாட்டம் நாணுமற் பார்த்தவளால்
ஆடம்ப ரம்பின்னே அடருவதைக் கேளுமென்று. சொல்ல

தோங்கல் இராகம்.

ஆண்கட் *கிஜ்ஜத்துப் பெண்டுகளால் அதுபோல் †ஸில்லத்துப் பெண்டுகளால்
வீண்சண்டைபஸாத் பெண்டுகளால் விளையும் பிதஅத்துபெண்டுகளால்
‡கூன்களுண்டாகல் பெண்டுகளால் குடும்பமுடைபடல்பெண்டுகளால்
மேன்மை§பதிபுகல் பெண்டுகளால் மெலிவாம் நார்புகல் பெண்டுகளால்.

உரிய சுகம்பெறல் பெண்டுகளால் உளண்டு சலித்திடல் பெண்டுகளால்
சிரிய மனேயோங்கல் பெண்டுகளால் சீர்கெடல்மக்கள் பெண்டுகளால்
அறிவு பெறல்பாலர் பெண்டுகளால் ஆகல்மூடராய் பெண்டுகளால்
பரிவுடனுய்ந்து தந்திரமாய் பாரியர்களை நடத்தாமலே. (16)

வேறு. சொல்லக் கூடாதா.

17. இத்தாதி நலம்பொலங்கன் ஏந்திழை வசமிருக்க
குத்தாப்போ லலையவிட்டால் கொடுமை விளையுமென்று. சொல்

18. ஆட்டத்தை நீகாட்ட அதைபார்த்த உன்மனைவி
நாட்ட மாட்டத்தில்வைத்து தாட்டுவா ளுன்னைஎன்று. சொல்ல

19. அழகானப் பெண்டீரை ஆட்டம் பாட்டம்பார்க்க
சுழங்கமில் லாக்கொடுபோங் கசடரே கேளுமென்று. சொல்ல

20. இறந்தக் கிழவிதனை யிரக்கயில் கபுருக்குள்ளே
திரைகட்டி இரக்கவந்த தீன்சட்ட முணருமென்று. சொல்ல

21. குறையுராக் குமரிபெண்ணைக் கூட்டத்தார் காணவிட்டோன்
தரையில் தைய்யூசுக்குத் தலைவனு யிருக்குமென்று. சொல்ல

22. அஞ்ஞானர் சிஷ்யருக்கு அஹ்ஸன்சொல் ஷரஉபடி
விஞ்ஞாப னம்முணர்ந்து வேடிக்கை விடுங்களென்று. சொல்ல

* இஜ்ஜத்தென்பது, மரியாதை. † ஸில்லத்தென்பது, அவகீர்த்தி.
‡ கூன்கள் என்பது, ரத்தக்களரி. § பதி என்பது, சொர்க்கம்.

முல்ஹிதுகள் வட்டிவாங்க வழிகாட்டுவது.

1. வட்டிதுகை நூற்றிலொரு வண்மைதுகை சேர்க்கைஎல்லாம்
மட்டில்லா சுத்தமென்கு மடையரே கேளுமென்று. சொல்ல

2. ஹறும்பன்றி இரைச்சையுடன் ஆட்டிரைச்சி சேர்க்கஅதை
கருஹியத் தன்றிதின்னும் கசடர்கள் வார்த்தைஎன்று. சொல்ல

3. வயர்வளர்க்க வழியுணரா வட்டிதின்ன சொல்ஞானி
பயகானு தின்பதது பலிசைக்கு மேன்மைஎன்று. சொல்ல

4. பலிசையை வாங்கதின்ன பாமர ஜனங்களுக்கு
சலியாமர் ஹீலாசொல் சண்டாள ஞானருக்கு. சொல்ல

5. வட்டியை வாங்கிறவன் வல்லோ னிடத்திற்சண்டை
மட்டில்லா செய்வோனென மார்க்கமறை கூறுதென்று. சொல்

6. வட்டிதின் போர்கொடுத்தோர் வரைந்தோர் சாட்சியிடுவோர்
அட்டியில்லா நரகரென அண்ணல்நபீ சொன்னரென்று. சொல்

7. மட்டில்லா தன்னைபெற்ற மாதாவை மகனும்ஸினு
அட்டியில்லா செய்பாவம் வட்டியினு லடருமென்று. சொல்ல

8. வட்டிக் கிடங்கொடுத்தால் வருகும்ஆ தாயமென்று
மட்டில்லா சொல்மடையன் மார்க்கம்விட்ட மூர்க்கனென்று. ()

9. பட்டி தொட்டி நுழைந்து பாவமுண ராஞானீ
வட்டிவாங்க வழிகாட்டும் வண்டரை வெருட்டுமென்று. சொல்

முல்ஹிதுகள் ஸினுவுக்கு வழிகாட்டுவது.

1. மணமுடிக்க சக்திஇல்லான் மாதருக்கு காசளித்து
இணக்கமா *யிஷ்கிரக்க ஏலுமென்ற இடும்பருக்கு. சொல்ல

* யிஷ்கென்பது, காமம்.

2. பணுவாம் ஸினைவசெய்யப் பாமர ஜனங்களுக்கு
விணுவி தீனைகெடுக்கும் வேஷ மஷாயிகுக்கு. சொல்ல

3. அடியர்செய் பாவமதால் அடருமிடர் போதாமல்
தடிப்பயலஞ் ஞானியுட தகமைசோல் தட்டுமென்று. சொல்ல

அஞ்ஞானிகள் சொல்தகமை.

தோங்கல்.

ஒருவனைநபீ தங்களிடம் உரைத்தான் யானிக்காஹ் செய்வதற்கு
பொருளில்லாதவன் இஷ்கெனக்குப் பொருந்தியடக்கிட முடியாததால்
வருத்த மெனகேட்க காசளித்து வழிபட் டோளுடன் இஷ்கிறக்க
அருமைநபிசொன்னுரென்றஷைத்தா னஞ்ஞானர்வலை சிக்கிடாதீர்.(4)

வேறு. கேட்கக் கூடாதா.

5. இந்தஹதீதுசரி என்பதற்கு ருவியுடன்
எந்தக் கித்தாபில்வந்த தியம்படா லோபிஎன்று. கேட்க

6. தகமைப் பலதைசொல்லித் தனியோன் *லகுனத்துபெற
புகழ்தீ னேரைகெடுக்கும் போலியஞ் ஞானிகளை. கேட்க

7. விபசாரம் செய்பவன்மேல் வேந்தன்லஅ னத்திரங்கி
பவரீமான் விட்டமணப் பாவியா கிட்டானென்று. சொல்ல

8. விபசாரந் தட்டுமென வேதம்புறு காணும்ஹதீஸ்
உபசாரம் வந்ததுவை உற்றுபார் லோபிஎன்று. சொல்ல

9. கொடிய ஸினுவுக்கிடம் கொடுக்குமிடர் ஞானிவந்தால்
அடிசெருப்பால் கோடேத்தின்ஆம் அனுப்பும் தீனேர்களென்று.

---

*லகுனத்தென்பது, முனிவு.

முல்ஹிதுகள் மவுத்தாவுக்கு முரீதும் திக்றுமே போதுமென்பது.

1. மையத்துக் கேன்றெழுகை மருங்கா முரீதின்திக்கிர்
அய்தமாய் போதுமென்ற அஞ்ஞான மடையர்களே. கேட்க
2. அல்லா(ஹ்)அமறப்படிக்கி ஆலமேஅஜ் ஸாமைவிட்டு
எல்லாம் பர்ஸக்அளவில் ஏகுவது உண்மையென்று. சொல்ல
3. பர்ஸகுப் போகுவர்க்கு பக்ஷமுடன் ஸிந்தாக்கள்
நற்கருமஞ் செயபிக்ஹூ நவில்வது ஏதுக்கென்று. கேட்க
4. ஜனஸா தொழுதடக்கி சங்கைநலம் செத்தார்க்கு
வினவும் ஷரஉமுறை வீணரே எவருக்கென்று. கேட்க
5. ஜனஸா தொழும்சப்பில் சாருவது ஏதுக்கென்றால்
வினவும் ஷரஉடையோர் விருப்பத்துக் கென்பவரை. கேட்க
6. செத்தார்க்கு செலவிடலும் செய்தனுப்பும் புண்ணியமும்
எத்தாது அவருக்கென்ற இடுமடையஞ் ஞானிகளே. கேட்க
7. பொருள்தேடி விட்டுகபுர் புகுந்தோரை நாடாத
கருமிகள் காலம்வந்தக் கள்ளரஞ் ஞானிகளே. கேட்க
8. மரித்தோர்க்கு செய்நலங்கள் மணமா யேற்காதுஎன்று
பிரித்துநீ பார்த்தகித்தாப் பேர்சொல் பேமானி என்று. கேட்க

முல்ஹிதுகள் கபருஸ்த்தானுக்கு மதிள்கட்டல் வீணென்பது.

1. அல்லா(ஹ்) றசூலுடைய அருளறியா அஞ்ஞான
பொல்லான்நீ மவுத்தாகிப் புகுதாயோ கபுரிலென்று. கேட்க
2. செத்தவர் மண்ணுனர் செவுருவைத்து செப்பனிடல்
பித்தரெனப் பிதற்றுகின்ற பேதை யஞ்ஞானருக்கு. சொல்ல

3. உலகத்தின் வாழ்க்கைஎல்லாம் உள்ளது சுருக்கமென
துலக்கமாய் புறுகானின் துய்யமறை கூறுதென்று. சொல்ல

4. உலகத்தின் வாழ்க்கையது ஒருவருக்கும் நிலைக்காமல்
கலக்கமாய் போகுமிடம் கபுருயி ருக்குமென்று. சொல்ல

5. வழுடுக்கு மெத்தைகட்டி இதில்சுகமாய் படுத்த பலர்
பாழுடைய மெத்தைவிட்டு படுத்தார்மண் ணரையிலென்று. ()

6. சிலகாலம் வாழ்வீட்டை சிங்காரித் துகபுரும்
பலகாலம் வாழ்வீட்டைப் பாழ்படுத்த வொண்ணுதென்று. ()

7. விட்டுப்போம் வீட்டின்மேல் வீண்பிரியம் வைப்பதுபோல்
பட்டுபோனல் போம்வீட்டை பாழ்படுத்த வொண்ணுதென்று.

8. நல்லோர்க ளுக்குகபுர் நற்பதி பூந்தோட்டம்
பொல்லோர்க்கு நரகத்துட் படுகுழி யாகுமென்று. சொல்ல

9. ஐந்து விடுத்தங்கபுர் அனுதினமு மழைக்குதென
கந்தங் கமழும்நபி கருணையுடன் சொன்னதுவை. சொல்ல

10. பச்சை ஈத்தங்கோத்தைப் பயகாம்பர் கபுரில்நட
இச்சை யுடன்கேட்க எம்மிறசூல் தரும்பதிலே. சொல்ல

11. கொத்திரங் காயும்வரை குறையாசெய் திக்றுபலன்
எத்த கபருளிக்கதாப் எளிதுக்கென சொன்னுரென்று. சொல்ல

12. மாண்டவர் மண்ணுனல் மடத்தனவஞ் ஞானிகளே
நீண்டநபி சொல்செயலை நீச்சரே யுணருமென்று. சொல்ல

13. காலமும் யாம்வசிக்கும் கபுருஸ்த்தா னுக்குமதிள்
சீல முடனெடுக்கார் செத்தால் தெரியுமென்று. சொல்ல

14. நான்குபுற மதிலிட்டு நசாருக்கள் கோரிகளை
பான்மையுடன் செப்பனிடல் பாரடா வஞ் ஞானியென்று. ()

15. இறந்தோர்கள் மீதிரக்கம் ஈசாயி செய்துமதிள்
சிறப்பா யெடுப்பதுவை சீர்தூக்கிப் பாருமென்று. சொல்ல

16. கபரின்மேல் மெதுவாக கால்வைத்து நடந்தாலும்
அபயம் மையத்தலைமேல் ஆணிகுத்தல் போலஎன்று. சொல்ல

17. அடக்கு மைய்யத்தின்மேல் ஆமோ டேதும்நடந்தால்
கடப்பாய் கபருளிகட்கு கஷ்டம்பல காணுமென்று. சொல்ல

18. கர்ப்பம் நிறைவயர்மேல் காலால் நடக்கப்படும்
நிர்ப்பந்தங் காணதுயர் நேருங்கபு ருளிக்கென்று. சொல்ல

19. காயம்கபுருகள்மேல் கால்நடைகள் நடப்பதுவை
பாயமா யூரவர்கள் பார்த்தடைக்கார் பாவிஎன்று. சொல்ல

20. அறிந்தவர் ஒருகாலும் அல்லத்தட்டார் ஷரஅதுவை
சரியாகப் பற்றிஅமல் சங்கையாய் செய்வாரென்று. சொல்ல

21. அடியும் நுனியிருக்க நடுப்பயிர் மேய்ந்ததெனுந்
தடியர்கள் மனம்போல தகுதிபெற பேசலென்று. சொல்ல

22. இத்தாதி இடர்பேசி ஏற்ற தீனைக்கெடுக்க
குத்தாப்போ லலைந்தும்மை குலைக்கசொல் மூதேவிக்கி. சொல்

23. வெகுமதியஞ் ஞானருக்கு வீணிற்சிலற் நேரமட்டும்
தகுதியவர்க் கெந்நாளும் தணல்நரகம் சொந்தமென்று. சொல்ல

24. தகுமற்ற யஞ்ஞான தடியற்சொல் பற்றினவர்
வெகுமதி யவர்சொந்தம் வேந்தணல் நரகமென்று. சொல்ல

25. ஆகில்கட் கிம்மட்டும் அருளியது போதும் பொல்லா
ஜாகில்கட் கெம்மட்டும் சாற்றினும் போதாதுயென்று. சொல்ல

26. பேரம்புக்கும் வாரைக்கும் பெருக்கநீர் இறைத்தாலும்
திரமாங் கனிதராபோல் தீனர்க்கு சொல்வதென்று. சொல்ல

27. இம்மட்டும் நிருத்தியதால் ஈமான்இசுலாம்பேணும்
உம்மத்தோர்க் கிருலோகில் உடையோன் றஹ்மத்தென்று. ()

முடிவுரை.

1. சங்கை மனுவகுப்பாய் சர்தார் நபீஉம்மத்தாய்
அங்கமா யுதித்தவர்கள் அஞ்ஞான மகற்றுமென்று. சொல்ல

2. பழைய அஞ்ஞானம்பல பரத்து மஞ்ஞானிகளின்
உழைப்புணரா புதுஞான முபதேச முளைத்ததுவை. சொல்ல

3. அடியிற்சொல் நூல்மூன்றும் அனந்தம் நாட்டிற்பரவி
வடிவாக வாசித்தவர் வறட்டிழுப்பில் பட்டதுவை. சொல்ல

4. தத்துவ இசுலாமும் தவிர ஒரு மருகமலம்
மற்றிசுலாம் போதினியு மார்க்கநூல் அல்லவென்று. சொல்ல

5. இந்த மூன்றுநூலே *இசுலாத்தின் வாளுடனே
பிந்தா †ஹிபாஜத்துவும் பிசகெனவே தட்டுதென்று. சொல்ல

6. அஞ்ஞானர் உபதேசம் அணுவேனு மாகிரத்தில்
பஞ்சாய் பரக்குமில்லா நெஞ்சார உணருமென்று. சொல்ல

7. நான்கறிவு மிருகத்துக்கு நாட்டும்வல்லான் மானிடர்க்கு
பான்மையாய் புத்தியொன்றை பதித்ததால் யுணருமென்று. ()

8. அறிவென்னும் புத்தியதால் ஆய்ந்து அஞ்ஞானிகளை
தெரிந்ததும் ஊரைவிட்டுந் திட்டமா யோட்டுமென்று. சொல்ல

9. மனுடரில் உள்ளதுவை மவுத்து அடுக்குமுன்னே
இனிதாக செலவுசெய்ய ஏற்றமறை கூறுதென்று. சொல்ல

10. இச்சிறுநூ லஞ்ஞானர் இடர்திருத்த என்றமட்டும்
அச்சிட்டு வெளிபடுத்தல் அல்லா(ஹ்)வின் உதவிஎன்று. சொல்

11. அல்லாவின் அருள்தேடும் அழகாம்தீன் குலத்தவரே
நல்லாக இச்சிறுநூல் நல்கருத்தை யுணருமென்று. சொல்ல

12. ஆதிநபிதீனை ஆலமெங்கும் ஜொலிக்க அல்லா(ஹ்)
ஜாதி முஸ்லிங்கள்மனம் சங்கையுடன் நாடவென்று. சொல்ல

13. ஆமீனுமீன் என்றும் அஹ்ஸனு யஞ்ஞானர்
காமீலாய் ஷரஐபற்ற கருத்திலே நாடவென்று. சொல்ல

பிறஹ்மதிக யா அர்ஹமர் றூஹிமீன்.

துஆகேட்க தன்பீஃ.

தோங்கல் இராகம்.

பாவ மடர்ந்திடல் வாயினுலே பாரகஹர் செய்யும் செயலினுலே
பாவமடர்ந்திடில் நம்செயலால் பாரில்ஆகிரில் படைத்தோனிடம்
தாவஅடியர்கள் தட்டுக்கெட்டு தவிப்பதகலவே தனியோனிடம்
ஆவலொடு கெஞ்சிகேளுமென்றே அருளினர்இமாம் கஸ்ஸாலியும்.

* இசுலாத்தின் வாளென்பது, ஸைபுல் இஸ்லாம்.
† ஹிபாஜத்து என்பது, ஹிபாஜத்துல் இஸ்லாம்.

குத்துபா இராகம்.

ஹதீஸ்ஆபி யத்தைநாடி அடியன் துஆ கேட்டிடில்
அதிபதிவல் லானவன்மே லதிகப்பிறியம் வைக்கிருன். (1)

ஹதீஸ்துஆஎப் போல்கொத்த தென்ருல் கேட்பவன்பேரிலாம்
சதிபலாயை தட்டிவிலக்கும் கேள்கும்துஆ என்றுதான். (2)

ஹதீஸ்பாவிகள் கேட்ககேட்க ஹக்கன்கேளா திருந்துபின்
நிதியாக மூன்ரும் விடுத்தம்கேட்க மலக்குகளுக்கு சொல்கிருன்

என்னடியன் கெஞ்சிகேட்க என்னைத் தவிர யாருமே
நன்றுகிடைக்கா தென்னைகேட்டா னென்றுபழக்கம் பேசுவான்.

அருளுகின்ருன் ஹக்தஆலா அடியர்கேட்போ ரென்னிடம்
சருகாமற்கேளு மதைகுபூலு செய்கிறேநா னென்கிருன். (5)

இன்னுமொருரி வாயத்தில்வந் திருக்குது துஆவினுல்
நன்றுறஹ்மத்து கதவைதிறந்து வைக்கப்படு மென்றுதான். (6)

துனியா ஆகி ரமிரண்டில் வெற்றி பெருக நாடுவோர்
பனியாதமாக்கள் ஹக்கனிடத்தில்கேள்கும்துஆ என்றுதான். (7)

வந்திருப்ப தாலேநமக்கு எந்தஇடர்களாகிலும்
வந்தடுத்தால் விலகவேண்டி தொழுதுதாழ்மை யாகதான். (8)

ஒவ்வொருவர் செய்தபாவங் குறித்துதௌபா செய்துபின்
பவ்வமகற்ற கஷ்ரகற்ற கேளுந்துஆ உகந்துதான். (9)

ஆபியத்தைநாடி ஹக்கனிடங்கேட்கும் அஹ்ஸன் துஆ.

இத்தனைத் தாமதமேதையா. என்ற பின்முடுகு மெட்டு.

உன்னுதவி வேண்டும் அல்லாஹு, உன்னையன்றி
பின்னர்யாரைக் கேட்போம் வஹ்தஹு.

லாஷரீக லஹு என்ற, லகபுக்குடையோ னெங்கள்பாவந்
தூஷணையஞ் ஞானமகற்றி, துய்யதீனை காப்பதற்கு. உன்னுதவி

1. ஆலம்பதினெட் டாளும்றஹ்மானே, அனைவற்றையும்
சீலமுடன் வளர்க்கும் கோமானே
காலமும்எமை காக்கும் சீமானே, எங்கள்முதியோர்
பாலர்முகத்துக் காகநீ தானே

காலமும்யாம் செய்தொழிலில், சாலவேபறக் கத்தவையில்
ஆலநபீ முகத்துக்கீந்து, போலியஞ்ஞானம் பறக்க. உன்னுதவி

2. வின்னமாமஞ் ஞானமிகுத்ததால், வீணில்மிகுபேர்
நன்றுஷரஐ தட்டிவிட்டதால்
துன்பநோய்கள் பஞ்சமடுத்தால், தொடர்துயர்
தூராக்கவேண்டி உன்னை கேட்பதால்

என்னஎங்கள் துயரைசொல்வோ, மெவரிடம்பிரி யாதுசெய்வோம்
வின்னமெமதை பொருத்தெமக்கு, வேணமட்டு முதவிபுரிய. உன்னுத

3. அடியர்செய் யநியாய மிகுத்தலால், அவர்கள்பேரில்
கொடிய வரசைக் கோமான் சாட்டலால்
நெடிய இடர்கள் நிகழ்த்தும் கொடுமையால், நெஞ்சங்கலங்க
அடியார்க்கடரு மாபத்தென்பதாய்

வடிவுடன்னபி சொன்னவாறு, படியிலஞ்ஞா னத்தின்மாறு
மிடியிருக்கினும் பொருத்தெமக்கு, வேணமட்டு முதவிபுரிய. உன்னுத

4. அல்லாஹுஉன்னை மறந்துசிலபேர்கள், அஞ்ஞானிகளால்
பொல்லா ஆட்டம் பாட்டம் பார்ப்போர்கள்
கல்லார்வட்டி வாங்கியுண்போர்கள், கடிதமிஸ்பைட்
உல்லாசமாக யாடிகெட்டோர்கள்

எல்லாமறிந்து உனதுகோபம், நல்லாஇறக்கி இருக்கப் போதும்
பொல்லா வினைபொருத்து, எல்லாம் செழிப்பதற்கு. உன்னுதவி

5. நன்னபீதம் உம்மத்தென்போர்கள், நாதான்ஷைகால்
அன்னபீசொல் செயலை விட்டோர்கள்
தன்மைமீசை வெட்டாவிட்டோர்கள், தாடிசிரைத்து
அன்பொடுநா ளுமற் றிரிவோர்கள்

வின்னமாங் கிருப்புவைத்து, சின்ன்முணமுர் பிழைபொருத்து
நன்னபீசொல் செயலெடுத்து, நடப்பவர்க்காயுலகுசெழிக்க. உன்னுத

6. தொழுதிடார்கள் மிகுத்த தாலையே, தொல்லுலகில்
முழுதுமுந்தன் கோபம் பெறுகியே
பழுதானபஞ்சம் பாரில்பரவியே, பற்பலவித
இழுவாம்நோய் எங்கும் சுற்றியே
முழுதுயர்யா மெடுப்பதற்கு, மூலமஞ்ஞா னீகளென்று
பழுதுபொருத்துன் கிருபைகொண்டு, பஞ்சமகன்று முலகுசெழிக்க.

7. உலகத்தில்யாம் வாழும்நாளையில், உகந்தமலை
துலக்கிஆகிர் பயணவேளையில்
நலத்தகலிமா ஓதிநாவினில், நல்மவுத்தாய்
மலக்குகபரில் கேட்கயில்பதில்
கலக்கமில்லாக் கொடுத்துஹஷரில், வலக்கையோலைவாங்கி எளிதில்
பலசுகம்யாம் பெறசுவனில், பாதகமஞ் ஞானந்தட்ட. உன்னுதவி

8. அடுக்குமாகிர் பயணம் நினைப்பதா, அகவிலையால்
குடும்பத்தொல்லைத் துயரைப் பார்ப்பதா
கொடுக்கும் செங்கோல் சட்டமுணர்வதா, கோடியஞானர்
தொடுத்த தொல்லைக் கேங்கிதவிப்பதா
படுவலையிற் பட்டமீன்போல், *பாந்தள்வாயின் தேரையைப்போல்
அடுத்தஞ்ஞான மகன்றுஎங்கள், அஹ்மதுநபீ தீன்செழிக்க. உன்னுத

9. அல்லாஹுஉந்தன் கஹ்ரையகற்றிடு, ஆலமெல்லாம்
நல்லாக செழிப் பாக வாக்கிடு
பொல்லாஞானர் மனதைத் துலக்கிடு, புண்யஅமலை
எல்லாருஞ்செய்ய ஆவல் கொடுத்திடு
நல்லாருநபீ கைருல்ஆலம், நன்னபீ முகத்துக்காக
எல்லாம்அஹ்ஸ னாகவாழ, சல்லாபஆமீன் ஆமீனாக. உன்னுதவி

பிறஹ்மதிக யாஅர்ஹமர்ராஹிமீன் வ. ஆகிருதஅவானா அனில்ஹம்து
லில்லாஹி றப்பில்ஆலமீன்.

இஸ்லாஹுல் முல்ஹிதீன்(மஅ)ஹிபாஜத்துல் முஸ்லிமீன்
முற்றுப்பெற்றது.

* பாந்தள் என்பது பாம்பு.

786

தீனுக்கிடர் பரவவிடாமல், விர்த்திசெய்ய நன்றுகளை நாடும்
கனம் வாயீஜீன்கள் சீமான்கள் சமுகத்தில்

வேண்டுகோள்.

1-வது. இந்த இஸ்லாஹுல் முல்ஹிதீன் (மஅ) ஹிபாஜத்துல் முஸ்லிமீன். என்னும் நூலியற்ற துவக்கமுதல் அச்சிட்டுவெளிப்படும் வரையில் எடுத்தப்பிரையாசையையும், பொருள்விரையமும், கவனியாமல், றஹ்மானுதவியால் தமிழில், தயாராயிருப்பதும், அரபுத்தமிழில் அச்சிட்டு வருவதும், எவருமெளிதிற் கைப்பற்றி நன்மைபெற குறைந்த ஹதியாவாக ரிஸாலா 1-க்கு அணா 4 ஆக வைக்கப்பட்டது. வி. பி. செலவு 1 முதல் 4 ரிஸாலாவரையில், அணா 5 ஆகிறது. இதற்குமேல் மணியார்டர் கமிஷன் அணா 2-ம் ஏற்படுகிறது.

2-வது. இதனை அஞ்ஞானிகளையும், அவரை தொடர்ந்த முஸ்லிம் பிறவிகளை சீர்திருத்த அல்லாஹ் இடம் ஆதரவுவைத்து இயற்றிய இந்த ஆஸி ஒருநபராலும், ஊரார் பணங்காசை இச்சைவைத்து உள்ளதுள்ளபடிக்கு ஹக்குகளைப் பேசாத வாயீஜீன்களாலும் முடியாத காரியம். ஆகையால் இதனை அச்சிட நன்கொடை புரிந்த சகியாளர் தம்முடையவும், இந்த ஆஸீயுடையவும், நல்நிய்யத்தின் அபிப்பிராயப்படிக்கு ஹக்கை, தீரமாக பேசக்கூடிய கனம் வாயீஜீன்களுக்கும் பட்டிதொட்டிகளெங்கும் பரத்திவைக்க நாடும் சீமான்களுக்கும், இந்த ரிஸாலாவை மிக்கக் குறைந்த ஹதியாவாக வைத்துள்ளதை அறிந்து நமது சங்கையான ஷரஜயும், சன்மார்க்கத்தையும், விர்த்தி செய்யத் தெரிந்து ஆர்டர் செய்ய விருப்பமுள்ளவர்கள், எழுத விரும்புகின்றனன்.

விலாசம் :—

க. முஹம்மது இப்ருஹீம் (அஹ்ஸன்)
புக்டிபோ, மேல் விஷாரம் P. O. (N. A. Dt.)

Kesari Printing Works, Madras.

தல்கீன் பீமுஹிம்மாதுத்தீன் லி அவுலாதில் முஸ்லிமீன்.

ஐந்தாம் பதிப்பு.

ரிஸாலாவிற் பொதிந்த விஷயங்களின் சுருக்க

விளம்பரம்.

1-வது முக்கியமான அஹ்காம்மசாயல்களை ஸவால், ஜவாபுமாக
உபதேசங்களை பாடல்களாகவும் பேசியுள்ளது.

2-வது ஈமான், இஸ்லாம், பரலு, வாஜிபு, சுன்னத்து முதலியவைக
இன்னதென்று எளிதில் அறியக்கூடியது.

3-வது ஷிர்க்கு, குபிர், பிதஅத்து, பெரும்பாவம், சிறுபாவம், இன்
சொல் செயலால், ஏற்படுவதென விளக்கி விலகச் சொல்வ

4-வது மதரஸா பாடசாலைகளிலோதும், சிறு பிள்ளைகள் எவ
விலக்கல்களறிய மிக்க அவசியமானது.

5-வது பெண்டுகள், புருஷனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளு
ஹைலு, நிபாஸின், மசாயல்களறிய முக்கியமானது.

6-வது முக்கியமான ஹக்தார்களின் ஹக்குகளை, இன்ன விதமாக நி
வேற்ற வேண்டுமென்பதை விளக்கக் கூடியது.

7-வது நாம் ஈமானுடன் மவுத்தாகி நற்கரைசேரும், வழிகளை எளி
விளக்கக் கூடியது.

8-வது இந்தரிஸாலா தமிழில் முன் நான்கு பதிப்பு செலவாய் அ
நாடு தேசங்களில், பிரசித்திப் பெற்றது.

9-வது முன்பதிப்புகளில் இல்லாத அநேக நூதன உபதேசங்
இந்த ஐந்தாம் பதிப்பில் சேர்த்துள்ளது.

10-வது முன்பதிப்பு அரபுத் தமிழில் பத்தணாவாக வைத்திருந்த
தமிழ் கித்தாபின் ஹதியாபோல் எவருமெளிதில் கைப்ப
அமல்கள் செய்ய எட்டணாவாகவே வைக்கப்பட்டது.

நூதன ரிஸாலஃ.

இஸ்லாஹுல் முல்ஹிதீன் (மஅ) ஹிபாஜத்துல் முஸ்லிமீ
இதில் இப்பிற்காலத்தில் ஷரஐதட்டும், அஞ்ஞானிகளின் வலையிற்பட்
முரீதீன்களுக்கு கூறும் உபதேசங்களை மற்றுமெல்லா முஸ்லிமா
பெண்களும், அநேக நல்மாராயங்களைக் கண்டு அமல் செய்யக் கூ
இந்த ரிஸாலஃ ஒவ்வொரு வீட்டிலும், ஒரு பிரதி இருக்க வேண்
தால், எவருமெளிதில் கைப்பற்ற குறைந்த ஹதியாவாக கிதாபொ
றுக்கு அணா **4.** இத்துடன் ஷை தல்கீன் பீமுஹிம்மாதுத்தீன்
அவுலாதில் முஸ்லிமீன் ரிஸாலஃவும் சேர்த்து, ஆப்பயிண்டு செ
கிதாபொன்றுக்கு அணா **12.** வி. பி. செலவு வேறு.

விருப்பமுள்ளவர்கள் நேரில் பற்ற அல்லது எழுத விலாசம் :—

க. முஹம்மது இப்ருஹீம் (அஹ்ஸன்),

புக்டிபோ, மேல்விஷாரம், P. O. (N. A. Dt.)